# வணிகமஞ்சரி

பெப்ருவரி 1987 February 1987

வணிகப் புதினங்களையும் கருத்துக்களையும்
தாங்கி வெளிவரும் திங்கள் இதழ்
வணிக அறிவியல் நிறுவன வெளியீடு

- வணிகச் செய்திகள்
- சந்தைப்படுத்தற் சேர்வை
- பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள்
- பெறுமானத் தேய்வு
- முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்

# VANIHA MANCHARY

MONTHLY REVIEW OF BUSINESS NEWS & VIEWS
PUBLISHED BY BUSINESS STUDIES INSTITUTE

ரூபா 5/-

# நிப்பொன்

உலகின் எப்பாகத்திற்கும் ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை

- குறைந்த செலவில் உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும்,
- ஒரு நிமிடத்துக்குள் சகல நாடுகளுடனும் தொடர்புகளைப் பெற்றுக்கொள்ளவும்,
- விமானச்சீட்டுக்கள், இந்தியன் விசா, பாஸ்போர்ட், பொண்ட், **Confirmation, Re-confirmation**

யாவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

உங்கள் தேவையே நமது சேவை

உடன் தொடர்பு கொள்ளவும்

**NIIPON TELE TRAVELS (PVT) LTD.,**

No. 2 G, Stanley Road,

JAFFNA.

TELEPHONE NO: 24866

# வணிக மஞ்சரி

மலர்: 1 பெப்ருவரி '87 இதழ்: 1

வணிகச் செய்திகளையும்
கருத்துக்களையும் தாங்கிவரும்
திங்கள் இதழ்.

வெளியீடு:

வணிக அறிவியல் நிறுவனம்,
148, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆட்சி உறுப்பினர்:

* இ. நி. வரேந்திரன்,
பட்டயக் கணக்கறிஞர்
* வே. அரியரத்தினம்,
பட்டயக் கணக்கறிஞர்
* ச. இராஜலிங்கம்,
சந்தைப்படுத்தல் ஆலோசகர்
* வை. ச. செந்தில்நாதன்,
சட்டத்தரணி
* சி. நா. ராதாகிருஷ்ணன்,
பிரதேச முகாமையாளர்,
லங்கா மில்க் பூட்ஸ் லிமிட்.
* மு. ஜெகதீசன்,
திஸ்ஸ சொயிஸ்
* நா. பேரின்பநாதன்
பல்கலைக்கழக விரிவுரையாளர்
* மா. சின்னத்தம்பி,
வலய ஆசிரிய ஆலோசகர்
* சி. யோகேஸ்வரன்
ஆசிரியர்

ஆசிரியர்:

கு. கல்வனை சேயோன்

மாணவர் பதிப்பு:

தனிப்பிரதி ரூ. 5/-
ஆண்டுச் சந்தா ரூ. 55/-

நூலகப் பதிப்பு:

தனிப்பிரதி ரூ. 10/-
ஆண்டுச் சந்தா ரூ. 115/-


## சிந்தனை

கடந்த தசாப்தம் பொருளியல் – வணிகவியல் சிந்தனைகளின் திருப்பு முனையாக அமைந்தது. மேற்குலகும் முதலாளித்துவ நாடுகளும் மட்டுமின்றி சோவியத் யூனியன், மக்கள்சீன போன்ற நாடுகளும்கூட இச் சிந்தனை மாற்றங்களால் தாக்கமடைந்தன.

இலங்கையைப் பொறுத்தவரை 1977இன் பின் ஏற்பட்ட மாற்றங்கள் பாரியவை. அவை ஏற்புடையவையா என்பதைவிட அவற்றின் தாக்கங்களைப் பற்றிக் கற்பதே முதன்மையானது. இத்தகைய பரிமாணங்களை நிராகரிப்போரும்கூட இவை பற்றிய அறிவு கொண்டோராக இருப்பது அவசியமானதாகின்றது.

தமிழ்மொழியில் இத்தகைய அறிவினை வளர்க்கத்தக்க பிரசுரங்கள் குறைந்த அளவிலேயே வெளிவருகின்றன. நாளேடுகளோ, ஏனைய சஞ்சிகைகளோ 'இத்துறைக்குப் போதிய முக்கியத்துவம் வழங்குவதில்லை. இந்த இடைவெளியை இட்டு நிரப்புவதற்காகவே **"வணிக மஞ்சரி"** வெளியிடப்படுகின்றது.

இதையொத்த நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டவற்றுள் ஒருசில சஞ்சிகைகளே தொடர்ந்தும் பிரசுரிக்கப்படுகின்றன. இந் நிலைக்கு இத்தகைய சஞ்சிகைகளின் வெளியீட்டாளர் தெரிந்தெடுத்த வியாபார முறை வலுவான காரணமாக இருக்கக்கூடுமென நாம் கண்டறிந்தோம். திடமான வியாபார அமைப்பு மட்டுமே இப் பிரச்சினையின் தீர்வாக அமையமுடியும். இதன் விளைவாக **"வணிக அறிவியல் நிறுவனம்"** அமைக்கப்படலாயிற்று.

சஞ்சிகை வெளியீட்டுடன், நூல் வெளியீடு, பாடநூல் புத்தகசாலை அமைத்தல், பாடநூல் வாசிகசாலை அமைத்தல், கருத்தரங்குகள் நடாத்துதல் என்பவை இந் நிறுவனத்தின் உடனடி நிகழ்ச்சித் திட்டங்களில் சிலவாகும்.

இவற்றுள் முதலாவதான **"வணிக மஞ்சரி"** உங்கள் கரங்களில் திகழ்கின்றது. மாதாந்தம் மலரவுள்ள இச் சஞ்சிகை வணிகவியலுடன் தொடர்பான செய்திகளையும் கருத்துக்களையும் தாங்கி வெளிவரும்.

உங்கள் ஆக்கங்களை வரவேற்கின்றோம். பிரசுரிக்கப்படுபனவற்றுக்கு சன்மானமும் வழங்கப்படும்.

எமது முயற்சி தொடர உங்கள் ஆதரவை நாடிநிற்கின்றோம்.

# வணிகச் செய்திகள்

## காப்புறுதித் தரகர்

அண்மையில் காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதல்லவா? இச் சட்டம் காப்புறுதி தொழிலுக்கான அறநெறிகளை வகுப்பதில் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

இதுவரை காலமும் காப்புறுதி ஆலோசகர்கள் என அழைக்கப்பட்டோர் இச் சட்டப்படி தம்மை காப்புறுதித்தரகராகப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும்.

காப்புறுதித் தரகர் எமக்கு நன்கு பரிச்சயமான காப்புறுதி முகவரைவிட வேறுபட்டவர் ஆவார். இவர் தமது வாடிக்கையாளரின் சார்பில் தொழிலாற்றுபவர். முகவரைப்போல முதல்வர் ஒருவரின் சார்பில் தொழிலாற்றுபவர் அல்லர். இவர் தனது வாடிக்கையாளருக்கு நடுநிலையான உயர் தொழில் ஆலோசனையை வழங்குவதுடன் அவரது தேவைகளை முறையாக ஈடுசெய்யக்கூடிய காப்புறுத்துவோரிடம் அவரை அறிமுகம் செய்வார். காப்புறுதி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டவுடன் இவரது பணி முற்றுப் பெற்றுவிடாது. இவ் ஒப்பந்தங்களின் செயற்பாட்டுடன் அவர் மேலும் தொடர்பு கொண்டவர் ஆவார். காப்புறுதிக் கோரிக்கைகள் வழங்கப்படும்வரை அவரது பணி நீடிக்கும்.

தொழில் முனைவோருக்கான வினைதிறன், காப்புறுதி பற்றிய தொழில்நுட்ப அறிவு, நவீன சந்தைப் படுத்தும் ஆற்றல்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்ற ஒருவராக தரகர் அமைந்திருப்பார். இவ் வகையில் காப்புறுத்தொழில் வல்லுனராகவே அவர் கருதப் படுகின்றார். இதற்கேதுவாக அவர் தேர்ச்சியும் அனுபவமும் பெற்றவராக இருத்தல் வேண்டும். பட்டயம் பெற்ற காப்புறுத்வோர் நிறுவனத்தின் பரீட்சைகளில் தேறி அதன் உறுப்பினராக இருப்பதுடன் தகமை பெற்றபின் ஐந்துவருட அனுபவமும் பெற்ற ஒருவர் மட்டுமே புதிய சட்டத்தின் கீழ் தம்மை காப்புறுதித் தரகராகப் பதிவுசெய்துகொள்ள முடியும். தனது வாடிக்கையாளரின் இடர்களை இயன்றளவு குறைக்க வேண்டியது இவரது பணியாக அமைகின்றது.

கண்ணியத் தொழில் புரிவோர் தொழில் முறையில் இழைக்கும் தவறுகள் வாடிக்கையாளருக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்தக்கூடும். இந்த இடருக்கெதிராகவும் காப்புறுதி நிறுவனங்கள் பூட்கைகளை வழங்குகின்றன. இலங்கையில் கண்ணியத் தொழில் புரியும் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பொறியியல் வல்லுனர், கட்டிடக்கலைஞர் போன்ற பல்வேறு வகையினர் காணப்பட்டபோதும் இவர்கள் இத்தகைய தவறுகட்கெதிராக இழப்பு எதிர்காப்பு பெறவேண்டுமென சட்ட முறையான நிர்ப்பந்தம் காணப்படவில்லை. எனினும் காப்புறுதி தரகர்கள் இத்தகைய எதிர்காப்பு பெறவேண்டியது சட்டமுறையான நியதியாக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இப் பணியின் மகத்துவம் தெரிகின்றதல்லவா?

## புதிய காப்புறுதி நிறுவனம்

அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டவாக்கங்களின் வாயிலாக காப்புறுதித் தொழிலை தனியார் நிறுவனங்களும் மேற்கொள்ள வகைசெய்யப்பட்டுள்ளதல்லவா? இச் சட்டத்தின்கீழ் முதலாவது தனியார் துறை காப்புறுதி நிறுவனம் 8–l–87 இல் தொழிலாற்றத்தொடங்கியது. யூனியன் அஸ்யூரன்ஸ் எனப்பெயர் கொண்ட இந் நிறுவனம் இலங்கையிலுள்ள 4 முன்னணித் தனியார்துறை நிறுவனங்களின் கூட்டு முயற்சியாக அமைகின்றது. எயிற்கின் ஸ்பென்ஸ் நிறுவனம், வரையுள்ள கார்சன் கம்பர்பச் நிறுவனம், வரையுள்ள விற்ரேல் பவுஸ்டட் நிறுவனம், வரையுள்ள மேர்கன்டைல் கிறடிட் நிறுவனம் ஆகியவையே அவை.

இந்நான்கு நிறுவனங்களும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதான முகவர்களாகத் தற்போது கடமையாற்றுகின்றன. 1962 ஆம் ஆண்டு காப்புறுதித்தொழில் தேசியமயமாக்கப்பட முன்னர் இந் நிறுவனங்களுள் மேர்கன்டைல் கிறடிட் நிறுவனம் தவிர்ந்த ஏனையவை காப்புறுதித் தொழிலில் நேரடியாக ஈடுபட்டிருந்தன. தேசியமயமாக்கப்பட்ட பின்னரும் வெளிநாட்டு காப்புறுதி நிறுவனங்களின் முகவர்களாக அவை தொடர்ந்தும் பணியாற்றி வந்தன. எனவே காப்புறுதித் தொழிலில் நன்கு அனுபவம் கொண்ட நான்கு நிறுவனங்களின் கூட்டாக ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய நிறுவனம் ஆயுள், பொதுக் காப்புறுதி தொழிற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்ளும். இந் நிறுவனம் பொதுமக்களுடன் வியாபாரம் தொடங்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

## பங்குச் சந்தையில் அதிகரித்துவரும் குற்றச் செயல்கள்

பங்குச் சந்தையில் ஊக வாணிபத்தில் ஈடுபடுவதன்மூலம் கோடீஸ்வரர் ஆனவர்கள் பலர் உண்டு. இத்தகையோர் அதிர்ஷடத்தில் நம்பிக்கை வைத்தும் விஞ்ஞான ரீதியான கணிப்பின் அடிப்படையிலும் பங்குகளின் எதிர்கால விலைகளை ஊகித்து அதற்கிணங்க பங்கு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதன் மூலம் இலாபம் ஈட்டிக் கொள்கின்றனர். கம்பனிகளின் இயக்குனர்களாகவோ அல்லது ஊழியர்களாக இருக்கும் சிலர் தமது தொழில் முறையாக சில அந்தரங்கத் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. அதேபோல அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கும் சிலரும் தமது பதவி காரணமாக பங்குச் சந்தையில் பரபரப்பை ஏற்படுத்தக்கூடிய சில தகவல்களை, அவை வெளிப்படுத்தப்பட முன்னரே, அறிந்துகொள்ள முடிகின்றது. அவர்களிற் சிலர் இவற்றைத் தவறுகப் பயன்படுத்துவதன் மூலம் பெருந் தொகையான இலாபத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இச் செயற்பாடு சட்டமுறையாக பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் 1980 இல் இத்தகைய நடைமுறைகளை தடைசெய்யும் சட்டம் முதன்முறையாக கொண்டுவரப்பட்டது. நிதியியல் சேவைகள் சட்டம் என அழைக்கப்படும் இச் சட்டம் கொண்டுவரப்பட்டபின் ஏறத்தாழ நூறு குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒருசிலவற்றை மட்டுமே நிரூபிக்கக் கூடியதாக இருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆவணங்கள் மாற்று நிலைய ஆணைக்குழு எனும் நிரந்தர அமைப்பு இத்தகைய செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு இலங்கை கம்பனிச் சட்டமும் இத்தகைய செயற்பாடுகளைத் தடைசெய்கிறது. சட்டமுறையான இத்தடையை மீறுவோருக்கு அதிகபட்ச தண்டனையாக 10 வருட சிறைவாசம் அல்லது ரூபா 50,000/- அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகள் வரை உலகில் எப்பகுதியிலும் இத்தகைய குற்றச் செயல்கள் அதிக பரபரப்பை ஏற்படுத்தவில்லை. அண்மையில் அமெரிக்காவில் ஐவன் எஸ். போஸ்கி எனும் நிதியீட்டாளர் மீது இத்தகைய குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது இதிலிருந்து மீளுவதற்காக அவர் $ 100 மில். தீர்ப்பனவுத் தொகையாகச் செலுத்த நேரிட்டது.

மூலதனச் சந்தை வளர்ச்சி பெற்றிராமையால் இலங்கையில் பங்கு சந்தை கொடுக்கல் வாங்கல் குறைந்தளவிலேயே இடம்பெறுகின்றன. எனவே இத்தகைய குற்றச் செயல்களும் அருகியே காணப்படுகின்றன.

## ஆவணங்கள் சபைச் சட்டம்

பங்குச் சந்தையின் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்காக ஆவணங்கள் சபைச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. இச் சட்டத்தின்படி பங்குச் சந்தையில் பணிபுரிவோர் சபையிடமிருந்து உரிமம் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இவ் உரிமங்கள் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படலும் வேண்டும்.

இச் சட்டம் பங்குத் தரகர்களையும் பங்குத் தொழிலர் (வியாபாரி) களையும் வெவ்வேருகக் கணிக்கிறது. உலகின் முன்னணி நிதி நிலையங்கள் இவ்விரு வகுப்பினரிடையேயும் காணப்படும் வேறுபாடுகளைக் களைய முயற்சி எடுக்கும் வேளையில் எமது சட்டத்தில் காணப்படும் இந் நியதி காலத்துக்கு ஒவ்வாதது என வாதிடப்படுகிறது.

புதிய சட்டத்தின்படி நட்டஈட்டு நிதியம் ஒன்று ஆவணங்கள் சபையால் பரிபாலிக்கப்பட உள்ளது. பங்கு தரகர் அல்லது வர்த்தகர் கடன் இறுக்கும் ஆற்றலை இழந்துவிட்டால் அதனல் முதலீட்டாளர்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளிலிருந்து நிவாரணம் வழங்கவே இந்நிதியம் ஏற்படுத்தப்படுகிறது. பங்குச் சந்தையின் செயற்பாட்டுக்கு அத்தியாவசியமான முதலீட்டாளர் நம்பிக்கையை இந்நிதியத்தின் வாயிலாக தோற்றுவிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் கூட பங்கு மாற்று நிலையமே பங்குகட்கான கூறு விலையை வழங்கும் நிறுவனமாகவும் உத்தியோகபூர்வ பட்டியலில் பங்குகளை உள்ளடக்கும் அதிகாரியாகவும் தொடர்ந்தும் பணியாற்றும். சட்டத்தின் குறைபாடுகளில் ஒன்ருக இந்த அம்சம் சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது பங்குச் சந்தையில் பாதிப்பை ஏற்படுத்தவல்ல நிறுவனங்களாக ஓரிரு முதலீட்டு நம்பிக்கை நிதியங்களும், முதலீட்டு நிறுவனங்களும் காணப்படுகின்றன. புதிய சட்டத்தின் கீழ் இவை தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இச் சட்டத்தின் குறைபாடுகளுள் ஒன்ருக இதுவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## புதிய வர்த்தக வங்கி

'சம்பத வங்கி' என தன்னை அழைத்துக்கொள்ளும் 'வரைவுள்ள முதலீட்டு கடன் வங்கி' என்ற பெயரில் புதிய வர்த்தக வங்கி ஒன்று உருவாக்கப்பட உள்ளது. இவ் வங்கி 1987 மே மாதம் முதல் தொழிற்பட உள்ளது. இது ஒரு உள்ளூர் தனியார்துறை வங்கி ஆகும். இதனையும் சேர்த்தால் உள்ளூர் தனியார் துறை வங்கிகளின் எண்ணிக்கை 3 ஆக அதிகரிக்கும்.

"மண்ணின் மக்களுக்கான உண்மையான இலங்கை வங்கி" என தன்னை வர்ணித்திருக்கும் இவ் வங்கி மேர்க்கன்டைல் கிரடிற் தொகுதிக் கம்பனிகளில் ஒன்றாக அமைய உள்ளது. 1977 இன் பின்னர் இலங்கையில் கிளையை ஆரம்பித்திருந்து விரைவில் அதனை மூட எண்ணியிருக்கும் பிரபலமான அமெரிக்க வங்கி ஒன்றின் ஊழியர்களையும் வாடிக்கையாளர்களையும் பெற்றுக்கொள்ள இவ் வங்கி முயற்சி எடுத்து வருகிறது.

## உலக வங்கியின் ஆட்குறைப்பு

வறிய நாடுகளுக்கு நிதி வசதி வழங்கும் மிகப் பெரும் சர்வதேச நிறுவனமாக உலக வங்கி காணப்படுகிறது. ஆண்டுதோறும் இவ் வங்கி வறிய நாடுகளுக்கு 16 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கி வருகிறது.

151 நாடுகளின் உடமையாக அமைந்துள்ள இவ் வங்கியின் பெரும்பான்மைப் பங்குகளை அமெரிக்கத் திறைசேரி கொண்டுள்ளது.

சென்ற யூலை மாதம் இவ் வங்கியின் தலைவராக பாபர். பி. கொனேபிள் (ஜூனியர்) என்பவர் பதவி ஏற்றார். உலக வங்கியின் செயற்பாடுகளை விரைந்து புனரமைக்கும் பணியில் இவர் ஈடுபட்டுள்ளார். வங்கியால் ஏற்படக்கூடிய பயன்களுக்கு ஏற்றவிதத்தில் அதன் செலவுகள் அமையவேண்டும் என்ற விதத்தில் இவர் அதிக அக்கறை கொண்டுள்ளார். இதற்கு ஏதுவாக வங்கியின் பணியாளர் தொயைக் கணிசமாகக் குறைக்க அவர் முயற்சி எடுத்து வருகிறார். இன்று உலக வங்கியின் பணியாளர் எண்ணிக்கை 6,100 ஆகும். இத் தொகை மிக அதிகம் என இவர் கருதுகிறார். இதே விதமான கருத்தை அமெரிக்க காங்கிரசும் பலதடவை வற்புறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கணக்கறிஞர் நிறுவனத்தின் புதிய பரிணமம்

செலவீட்டு முகாமைத்துவ கணக்கறிஞர் நிறுவனம் அரச பட்டயம் பெற்று தனது பெயரை பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்கறிஞர் நிறுவனம் என மாற்றியுள்ளது.

பொது வாழ்வில் மகத்தான சேவை ஆற்றும் நிறுவனங்களுக்கு அரச பட்டயம் வழங்குவது பிரித்தானிய மரபாகும். எனினும் குறித்த ஒரு தொழிலுக்கு ஒரேயொரு நிறுவனத்துக்கு மட்டுமே பட்டயம் வழங்கப்பட்டு வந்தது. கணக்கியல் தொழிலில் பட்டயம்பெற்ற கணக்கறிஞர் நிறுவனம் ஒன்று ஏற்கனவே காணப்படுகிறது. எனினும் செலவீட்டுக் கணக்கியல் என்பது கணக்கியலின் சிறப்பியல்பு கொண்ட துறையாக அண்மைக் காலத்தில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது செலவீட்டு முகாமைத்துவ கணக்கறிஞர் நிறுவனம் கைத்தொழிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். இந் நிறுவனத்தின் தொடர்ச்சியான பணியை அங்கீகரிக்கும் முகமாக தற்போது அதற்கு அரச பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்தின் உறுப்பினர் தமது தகைமையைக் குறிக்கும் பெயர் குறுக்கங்களை தொடர்ந்தும் பயன்படுத்தும் அதே வேளையில் முகாமைத்துவ கணக்காளம் என்ற பதத்தையும் தமது பெயர்களுடன் மேலதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என இந் நிறுவனம் தன் உறுப்பினர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## பொருளியல் மேதைக்கு நோபல் பரிசு

அரசியல் பொருளாதாரக் கொள்கை வகுப்பில் புதிய சிந்தனைகளை உருவாக்கித்தந்த ஜேம்ஸ் எம். புக்கானன் என்ற அமெரிக்க பொருளியல் மேதைக்கு 1986 ஆம் ஆண்டுக்கு பொருளியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது. "பொது மக்கள் தேர்வுத் தத்துவம்" என்ற இவரது ஆராய்ச்சிக்காகவே இவருக்கு இப் பரிசு வழங்கப்படுகின்றது. $ 294,000 பெறுமதியான பணப்பரிசை இவர் பெற்றுக்கொள்வார்.

... VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# சந்தைப்படுத்தல் சேர்வை
## (MARKETING MIX)

C. N. ராதாகிருஷ்ணன், B. Com. (Cey.).,
சந்தைப்படுத்தல் பிரிவு,
லங்கா மில்க் பூட்ஸ் (சி. டபிள்யூ. இ.) லிமிட்டெட்.

**வி**யாபார நிறுவனங்களுடைய நோக்கம் நுகர்வோர்க்கு அவரின் பணத்திற்கு சிறந்த பெறுமதியை அளிப்பதும் நிறுவனத்தின் முதலீட்டிற்கு ஏற்ற வருவாயை சம்பாதித்துக் கொள்ளுதலுமாகும். இம் முரண்பட்ட நோக்கங்களை திருப்திப்படுத்துவதே சந்தைப்படுத்தல் துறையினரின் அடிப்படைப் பங்களிப்பாகும். எனவே இவர்கள் தம் நிறுவன நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு தம்மால் சந்தைப்படுத்தப்படும் பொருள் அல்லது சேவை சந்தையில் எந்நிலையிலமைந்துள்ளது தமது நிறுவனம் எந்நிலைபாட்டை நாடுகின்றது என்பவற்றைத் தீர்மானிக்க வேண்டியிருக்கும். ஒரு நிறுவனம் தன் குறிப்பிட்ட ஒரு பொருளின் சந்தைப் பங்கு திருப்திகரமாக இல்லையெனக் கண்டு அப்பொருளின் சந்தைப் பங்கினை சந்தை முதன்மை நிலைக்கு (Market Leader) உயர்த்த விரும்பலாம். எவ்வாறு அவ் விருப்பினை அடைவது என்பது நிறுவனங்கள் பிரயோகிக்கும் சந்தைப்படுத்தல் தந்திரங்களின் வெற்றியில் தங்கியுள்ளது. அதாவது எவ்வளவு செலவீட்டினை சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகள் மீது மேற்சொள்வது எச் சந்தைப்படுத்தல் சேர்வையைக் கையாள்வது போன்ற சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்தின் அம்சங்களில் தங்கியுள்ளது. இங்ஙனம் நிறுவனம் கையாளும் தந்திரோபாயத்தில் சந்தைப்படுத்தல் சேர்வை மிக முக்கியமானதாகும். இதனைச் சந்தைச் சேர்வை எனவும் சிலர் குறிப்பிடுகின்றனர்.

சந்தைப்படுத்தல் சேர்வை என்பது நவீன சந்தைப்படுத்தற் கோட்பாட்டில் ஒரு முக்கிய கருதுகோளாகும். சந்தைப்படுத்தற் சேர்வை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படும். ''குறித்த சந்தையில் தன் விற்பனை மட்டத்தை அதிகரிக்க நிறுவனம் பயன்படுத்தும் கட்டுப்படுத்தக்கூடிய சந்தைப்படுத்தும் மாறிகளின் சேர்வையே சந்தைப்படுத்தற் சேர்வை'' எனப்படும். இம் மாறிகளைப் பலர் பலவகைகளில் வகைப்படுத்துவர். ஆனால் மக்கார்த்தி (Mc Carthy) என்பவரின் வகுப்பாக்கமே பெரிதும் பிரபல்யமானது. இவ் வகுப்பாக்கம் நான்கு Ps (Four Ps) என அழைக்கப்படும். இதற்குக் காரணம் இவரின் வகுப்பாக்கம் நான்கிலும் அவற்றின் ஆங்கில முதலெழுத்துக்கள் P யில் ஆரம்பிப்பதாகும். அவை

1. உற்பத்தி (Product)
2. விலை (Price)
3. இடம் (Place)
4. மேம்படுத்தல் (Promotion)

இங்கு உற்பத்தி என்பது விற்பனை செய்யப்படும் பொருள் அல்லது சேவையின் தன்மையைக் குறிக்கும். இதன் கீழ் பொருளின் தரம், அதன் அம்சங்கள் (features), பாணி (style), வியாபாரப் பெயர், பொதிப்படுத்தல் (packaging) அளவுகள், சேவைகள், உத்தரவாதம் என்பன அடங்கும். விலை என்பது விலைப் பட்டியல், கழிவுகள், படிகள், கடன்தவணை, கடன் நிபந்தனை என்பவற்றை உள்ளடக்கும். இடம் என்பது பங்கீட்டு வழிகள் (distribution channels), விற்பனைப் படுத்தப்படும் பிரதேசம், இட அமைவு, சரக்கிருப்பு, போக்குவரத்து போன்றவற்றை உள்ளடக்கும். மேம்படுத்தலினுள் விளம்பரம், நேராள் விற்பனை, விற்பனை மேம்படுத்தல், பிரபல்யப்படுத்தல் என்பன அடங்குகின்றன.

சந்தைப்படுத்தல் சேர்வையில் அமைந்துள்ள மாறிகளை வகைப்படுத்தியவருள் மக்கார்திக்கு அடுத்து அல்பேர்ட் W பிறே (Albert W. Frey) என்பவர் கவனிக்கத்தக்கவர். இவர் இரு தொகுதிகளாக சந்தைப்படுத்தல் சேர்வையை வகைப்படுத்தினர். அவை

1. முனைந்தளிக்கப்படுபவை (offering)
2. முறைகளும் கருவிகளும் (methods & tools)

ஒரு நிறுவனத்தால் முனைந்தளிக்கப்படுபவை எனும்போது நுகர்வோரிற்கு அந்நிறுவனம் அளிப்பவற்றையே கருதுகிறோம். அவை உற்பத்தி, பொதிப்படுத்தல் குறி அல்லது வணிகக்குறி (brand), விலை, சேவை என அவர் குறிப்பிட்டார். முறைகளும் கருவிகளும் என்ற தொகுதியில் பங்கீட்டு வழிகள் (distribution Channels) நேராள் விற்பனை, விளம்பரம், விற்பனை மேம்படுத்தல், பிரபல்யப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றார். ஆனால் லேசரும் ஹெலியும் (Lazer and Kelly) மூன்று காரணித் தொகுதிகள் சந்தைப்படுத்தற் சேர்வையில் அமைந்துள்ளதாகக் கருதுகின்றனர். அவை:-

1. பொருட்கள் சேவைகளின் சேர்வை (goods and service mix)

2. பங்கீட்டுச் சேர்வை (distribution mix)

3. தொடர்புச்சேவை (communication mix)

ஒரு நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் சேர்வை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளிற்கு மேற்குறிப்பிட்ட மாறிகளின் ஒரு சேர்வையாகவே அமைந்திருக்கும். நாம் சந்தைப்படுத்தல் சேர்வையை ஒரு சேர்வையாகவே அணுக வேண்டும். சந்தைப்படுத்தல் சேர்வை என்பது உற்பத்தி, விலை, இடம், மேம்படுத்தல் என்ற நான்கு Ps எனக் கருதுதல் தவருகும். "நிறுவனத்தினுல் கட்டுப்படுத்தக் கூடிய மாறிகளின் சேர்வை" என்பதே வலியுறுத்தப்படல் வேண்டும். நான்கு Ps களும் சேர்வையில் அமைந்துள்ள மூலகங்களே.

சந்தைப்படுத்தல் சேர்வையிலுள்ள மூலகங்கள் பல்வேறு அளவுகளில் சேர்கப்படலாம். ஆனுல் சந்தைப்படுத்தல் முகாமையில் தொழிற்படுவோர் தமது பொருளின் சந்தைநிலை குறித்து உச்சநலனைத் தரக் கூடிய சேர்வையினையே கருத்தில் கொள்வர். பெரும்பாலும் ஒரு பொருள் சந்தையில் அறிமுகப்படுத்தப்படும்போது குறைந்த விலையில் கூடிய மேம்படுத்தல் செலவுகளுடனும் அறிமுகப்படுத்தப்படும். ஆனுல் சந்தையில் அப்பொருள் ஸ்திரம் பெற்றதும் அதன் விலை போட்டிப் பொருட்களின் விலைக்கொப்பாவதும் விநியோகிக்கப்படும் பிரதேசம் விஸ்தரிக்கப்படுவதும் வழக்கம். வொண்டலேயிற் சவர்க்காரம் அறிமுகப்படுத்தப்பட்டபோது அதன் போட்டிப் பொருளான சன்லேயிற் சவர்க்காரத்திலும் ஒப்பீட்டளவில் விலை குறைந்ததாகவும் தரத்தில் உயர்ந்ததாகவும் அமைந்திருந்தது. பின்னர் அதன் விலை போட்டிப் பொருளின் விலைக்கு ஒப்பீட்டளவில் உயர்த்தப்பட்டது. இங்கு வொண்டலேயிற்றிற்கான சந்தைப்படுத்தல் சேர்வை அறிமுகப்படுத்தும் காலத்திலிருந்ததிலும் பின்னர் வேறுபடுவதைக் காண்கிறோம். வொண்டலேயிற்றின் வருகையால் பாதிக்கப்பட்ட சன்லேயிற் தயாரிப்பாளர்களான லீவர் பிறதேர்ஸ் (சிலோன்) லிமிட்டெட் தமது சந்தைப்படுத்தற் சேர்வையை (சன்லேயிற்றிற்கான) மாற்றினர். 'நவீன சன்லேயிற்' என்னும் பெயரில் உற்பத்தி (வடிவம், சுகந்தம், பொதியமைத்தல் – உறையின் வடிவம் உட்பட – ) மேம்படுத்தல் (விளம்பரச் செலவு அதிகரிப்பு) என்பவற்றில் மாற்றத்தினை ஏற்படுத்தியது. சில சந்தர்ப்பங்களில் நிறுவனங்கள், போட்டியாளரின் விலைக்கு ஒத்த விலையை (சில்லறை விலையை) தம்பொருளிற்கு விதிக்கின்ற போதிலும் மிகவதிக மேம்படுத்தற் செலவினைக் கொண்டு தமது பொருளை சந்தையில் அறிமுகப்படுத்துவதுமுண்டு. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட றேயல் (Royal) பால் மா, சந்தையில் முன்னணியில் நிற்கும் லக்ஸ்பிறே பால்மா சந்தைப்படுத்தும் நிறுவனத்தின் ஓர் ஆண்டுக்கான மேம்படுத்தற் செலவு ஒதுக்கீட்டிலும் மும்மடங்கு செலவினை அதன் அறிமுக செலவிற்காக ஒதுக்கியமை இதற்கு சிறந்த உதாரணமாகும். இவ்வுதாரணங்கள் மூலம் நிறுவனங்கள் சந்தைப்படுத்தல் சேர்வையினை மாற்றம் செய்வதன் மூலம் தமது விற்பனை மட்டத்தினை அதிகரிக்க முயல்வதனை நாம் கண்டோம். எனவே இவற்றின் மூலம் நிறுவனங்கள் சந்தைப்படுத்தற் சேர்வையினை ஒரு தந்திரோபாயமாகப் பயன்படுத்துவதனை அறிய முடிகின்றது.

சந்தைப்படுத்தல் சேர்வையிலுள்ள மூலகங்களில் சிலவற்றை மட்டுமே நாம் குறுங்காலத்தில் மாற்ற முடியும். விலை, செலவீடு, விற்பனையாட்களின் தொகை என்பன அவையாகும். ஆனுல் உற்பத்தியின் தரம், சந்தைப்படுத்தல் வழிமுறைகள் (marketing channels) என்பவற்றை நீண்டகாலத்தில் மட்டுமே மாற்ற முடியும். இவற்றை மனதிற்கொண்டே முகாமையாளர்கள் உத்தம சந்தைப்படுத்தற் சேர்வையை அமைப்பர். உத்தம சந்தைப்படுத்தற் சேர்வை குறைந்த செலவில் கூடிய நலனைப் பெற்றுத்தருவதாக அமையும். அத்தகைய சேர்வை சந்தையில் நிறுவனத்திற்கு பொருளின் விற்பனை மட்டத்தினை அதிகரித்து பொருளின் சந்தை நிலையையும் ஸ்திரப்படுத்தும். காலத்துக்குக் காலம் சந்தைப்படுத்தற் சேர்வையிலுள்ள மூலகங்களில் பயனளிக்காதவற்றை மாற்றி அல்லது முற்ருக நிறுத்தி, வேறு மூலகங்களிலும் தேவைக்கேற்ப மாற்றி அமைப்பது சந்தைப்படுத்தல் முகாமையில் அவசியமான நடவடிக்கையாகும். பொருளின் வாழ்க்கை ஓட்டத்துடன் சந்தைப்படுத்தல் சேர்வையும் மாற்றப்படல் தவிர்க்க முடியாதது.

சந்தைப்படுத்தல் சேர்வையின் மூலமே நிறுவனங்கள் தம் இலக்காக கொள்கின்ற நுகர்வோரை தம் வசப்படுத்த முடியும். இச் சேர்வையை அமைப்பதற்கு உள்ளகத்தில் அமைந்துள்ள சந்தைப்படுத்தல் தகவல் முறை (MIS) சந்தைப்படுத்தல் திட்டமிடல் முறை, சந்தைப்படுத்தல் ஒழுங்கமைத்தல் முறை, சந்தைப்படுத்தல் கட்டுப்பாட்டு முறை என்பவை உதவியாக அமையும். மேலும் சந்தைப்படுத்தல் இடைநிலையாளர், பொதுமக்கள், போட்டி நிறுவனங்கள், வழங்கலாளர் (Suppliers), நாட்டின் குடித்தொகை, பொருளாதார, அரசியல், சட்ட, தொழில்நுட்ப, பௌதீக, சமூக கலாசாரச் சூழ்நிலைகளும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். எனவே சந்தைப்படுத்தற் சேர்வை இச் சூழ்நிலைகளில் நிறுவனம் வெற்றி பெற ஒருகருவியாக அமைந்துள்ளது.

## சுருக்கம்:

1. சந்தைப்படுத்தற் தந்திரோபாயங்களில் மிக முக்கியமான கருவியாக அமைவது சந்தைப்படுத்தல் சேர்வையாகும்.

2. சந்தைப்படுத்தற் சேர்வை என்பது தன் விற்பனை மட்டத்தை அதிகரிக்க நிறுவனங்கள் பயன்படுத்தும் கட்டுப்படுத்தக் கூடிய சந்தைப்படுத்தல் மாறிகளின் சேர்வையாகும்.

3. இம் மாறிகள் பல முறைகளில் வகைக்படுத்தப் பட்டுள்ளன. அவற்றில் மக்கார்த்தி (Mc Carthy) என்பவரின் நான்கு Ps (Four Ps) எனப்படும். உற்பத்தி, விலை, இடம், மேம்படுத்தல் எனும் வகைப்படுத்தல் பிரபல்யமானது.

4. இம்மாறிகளின் பல்வேறு சேர்வைகளில் சிறந்த ஒரு சேர்வையையே பொருளின் சந்தைநிலை குறித்து சந்தைப்படுத்தல் சேர்வையாக நிறுவனங்கள் தெரிந்தெடுக்கும். இதனை முகாமையாளர் காலத்திற்குக் காலம் மாற்றியமைப்பர்.

### வங்கி வைப்புகட்கும் காப்புறுதி

வங்கிகளிலும் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களிலும் பொதுமக்கள் தமது பணத்தை இடுகின்றனர். இவற்றை அவர்கள் கேட்கும் நேரத்தில் இறுக்க வங்கிகளோ அல்லது ஏனைய நிறுவனங்களோ வகையற்றவையாக இருக்கக்கூடும்.

அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் இந்நிலை அடிக்கடி ஏற்பட்டதன் காரணமாக அங்கு வங்கி வைப்புக்கள் கட்டாயமாக காப்புறுதி செய்யப்படல் வேண்டுமென்ற சட்டம் இயற்றப்பட்டது.

அண்மையில் இலங்கையில் கிளையைக்கொண்டுள்ள "ஓவர்சீஸ் டிரஸ்ட் வங்கி"யின் ஹொங்கொங் தலைமை அலுவலகம் வகையற்ற நிலையை எய்தியது. எமது மத்திய வங்கியின் உடனடித் தலையீட்டின் காரணமாக ஹொங்கொங் நாட்டு அரசு அவ்வங்கியை பொறுப்பேற்றதன் மூலம் வங்கி முறிவு ஒன்று தவிர்க்கப்பட்டது.

நிதித்துறையில் மிக வேகமான வளர்ச்சி ஏற்படும் வேளையில் இந்நிலைகள் தோற்றுவது வழமையாகும். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து நிவாரணம் வழங்குவதற்காக வைப்புக்காப்புறுதித்திட்டம் ஒன்றினை மத்தியவங்கி வகுத்துள்ளது. இத்திட்டம் பற்றி அனைத்து வர்த்தக வங்கிகளுடனும் மத்தியவங்கி அளவளாவியுள்ளது.

இத்திட்டத்தில் சேரவேண்டுமென்ற எதுவித நிர்ப்பந்தமும் வர்த்த வங்கிகட்குக் கிடையாது. ரூ. 1 லட்சம் வரையான தனியொரு வாடிக்கையாளரின் வைப்புக்கள் இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்படலாம். காப்புறுதிக் கட்டணம் ·04% ஆகும். அரசாங்கத்தினதும் உள்ளூராட்சி நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகளுக்கிடையேயான வைப்புகட்கும் காப்புறுதி வசதி வழங்கப்படமாட்டாது. வைப்புச் சான்றிதழ்கள் நாணயக் கடிதங்கட்கு தேவையான எல்லை வைப்புகள் என்பவற்றுக்கு இக் காப்புறுதி வழங்கப்படுமா என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

இக் கட்டணங்களை செலுத்துவதனால் ஏற்படும் செலவினைத் தாமே பொறுத்துக்கொள்வதா அல்லது அவற்றை வாடிக்கையாளரிடமிருந்து அறவிடுவதா என்பதையும் வங்கிகள் தாமே நிர்ணயித்துக்கொள்ளவும் இவ் ஏற்பாடு வழிசெய்கின்றது.

# பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

கு. கல்வனி சேயோன்

## தோற்றுவாய்

எமது நாட்டின் குடித்தொகையின் 80% னர் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். அத்துடன் குடித் தொகையின் 75% னர் விவசாயிகளாகவோ அல்லது விவசாயத்துடன் தொடர்புள்ள தொழில்களைப் புரி பவர்களாகவோ உள்ளனர். எனவே பொதுவாக கிராமிய பொருளாதார அபிவிருத்தியும் சிறப்பாக விவசாய அபிவிருத்தியும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவதற்கு இன்றியமையாததாகின் றது.

விவசாய அபிவிருத்தியுடன் பல அம்சங்கள் தொடர்புடையவை. காணி, நீர், சிறந்த இன விதை கள், வளமாக்கி, பீடைகொல்லிகள், தொழில்நுட்பம், கடன், சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு துறை களில் அரசாங்கம் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது. பல்வேறு நிறுவனங் கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியும் அபி விருத்தியும் மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றின் காரணமாக விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது. எனினும் எதிர்பார்த்த அளவுக்கு விவசாயிகளின் வாழ் வில் உயர்நிலை ஏற்படவில்லை. விவசாயிகள், அதிலும் சிறப்பாக கிராம வாசிகள் அதிகளவுக்கு கடன் பட்ட வர்களாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றனர். விவசாயக் கடன் வழங்கலில் மேற்கொள்ளப்பட்ட நிறுவன ரீதியான ஏற்பாடுகள் நிறைவுடையனவாக இல்லாதிருத்தலே இதன் காரணமாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

விவசாயக் கடன் வழங்கலில் திடமான நிறுவன ரீதியான ஏற்பாடுகள் 1967 இன் பின்னரே மேற் கொள்ளப்பட்டன எனலாம். இவ்வாண்டிலேயே வர்த் தக வங்கிகள் கிராமியக் கடன் வழங்கலில் திட்ட மிட்ட ரீதியில் பிரவேசித்தன. இருப்பினும் வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் விவசாயத்துக்கென வழங்கப்பட்ட கடன்கள் இன்னும் 10% தை விஞ்சியதாக அமையவில்லை. இதற்குப் பல காரணங்களுள்ளன:

1) வர்த்தக வங்கிகளின் கிராமியப் புறக் கிளைகளில் பணியாற்றுவோரிற் பலர் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவராவர். எனவே கிராமியக் கடன்களைப் பற்றிய உள்ளார்வம் அவர்கள் மத்தியில் மிகக் குறைவாகவே காணப்படும்.

2) வர்த்தக வங்கி கிளைமுகாமையாளரின் திறமை அக்கிளை ஈட்டும் இலாபத்தின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகின்றது. கிராமிய கடன்களை வழங் கும்போது இலாபத்தின் அளவு குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் தனிக் கடனது அளவு சிறிதாக அமைகின்றது. கடன் பெறுவோர் பரந்து பட்டிருப்பர். இதனால் மேற்பார்வைச் செலவு அதிகரிக்கின்றது. மறுபுறத்தில் கிராமியக் கடன் வழங்கலில் பல்வேறு இடர்கள் காணப் படுகின்றன. விளைச்சலின் தன்மையைப் பொறுத்தே மீளளிப்பும் காணப்படும். இதனால் கிராமியக் கடன்களில் இலாப வாய்ப்பு பெருமள வுக்கு குறைந்ததாகவே அமைகின்றது.

3) இத்துணை நலக்கேடுகளின் மத்தியிலும் கிராமி யக்கடன் வழங்கலில் ஈடுபடும் கிளைமுகாமை யாளருக்கும் ஊழியருக்கும் போதிய ஊக்குவிப்பு கள் வழங்கப்படுவதில்லை.

4) ஏனைய நாடுகளில் காணப்படுவது போல இங்கு சட்டமுறையான நிர்ப்பந்தங்களும் காணப்படுவ தில்லை.

இக் காரணங்களால் கிராமியத் துறையில் நிரப்பப் படாத கடன் இடையீடு தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்றது. ஏற்கனவே காணப்படும் நிறுவனங்களால் நிரப்பப்பட முடியாததாக இந்த இடையீடு அமைந் துள்ளது.

இதன் விளைவாக கிராமியத்துறையின்பால் முற்று முழுதான அக்கறை செலுத்தத் தக்கதும் கிராமிய சமூகத்தின் வங்கியியல் சேவைகளைப் பொதுவாகவும் அவர்களின் கடன் தேவைகளைச் சிறப்பாகவும், ஈடு செய்ய வல்லதுமான நிறுவனமாக அமையத்தக்கதாக பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பிகிஅவ) தோற்றுவிக்கப்பட்டன. இவை கிராமிய கடன் வழங் கலில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள நிறுவனங்கட்கு மாற்றீடாகவன்றி அவற்றுக்கு அனுசரணையாகவே பணியாற்றும். சுருங்கக் கூறின் கிராமியக் கடன் அமைப்பை மேலும் வலுவுள்ளதாக்குவதே இவை அமைக்கப்பட்டதன் நோக்கமாகும்.

## அமைப்பு

**சட்டவாக்கம்:**

1985 இன் 15 ஆம் இலக்க பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டப்படி இவ் வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் தேசிய அரசப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு 1985 ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதி ஜனதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்றது. இச் சட்டத்தின்படி மத்திய வங்கியின் பணச் சபை பிகிஅவ களை கூட்டிணைக்கும் ஆணையை வழங்கலாம்.

**குறிக்கோள்:**

கிராமப் புறங்களில் விவசாயம், குடிசைக் கைத்தொழில், சிறிய அளவு கைத்தொழில்கள், மீன்பிடி, வர்த்தகம், ஏனைய விருத்தி நடவடிக்கைகள் என்பவற்றில் வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது இவ் வங்கிகளின் குறிக்கோளாக அமைகின்றது.

**தொழிற்பாடு:**

அந்நிய நாணய கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ஏனைய அனைத்து வங்கியியல் பணிகளையும் பிகிஅவ கள் மேற்கொள்ளும். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர், கைவினைஞர் போன்றோருக்கு தனித்தனியாகவோ அவர்களைக் குழுக்களாக இணைத்தோ இவ் வங்கிகள் கடன்களை வழங்கும். குடிசைக் கைத்தொழில்கள், வர்த்தகம், வணிகம், கைத்தொழில் ஏனைய சிறிய அளவு உற்பத்தி முயற்சிகள் என்பவை இவ் வங்கியில் இருந்து கடன்களைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு வழங்கப்படும் கடன்கள் குறுகிய காலத்துக்கு மட்டுமன்றி மத்திய நீண்டகாலப் பகுதிகட்கும் வழங்கப்படும்.

**மூலதனம்:**

ஒவ்வொரு பிகிஅவ யினதும் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 50 மில்லியனுகக் காணப்படும். இத்தொகை ரூ. 100/- பெறுமதியுள்ள 5 இலட்சம் பங்குகளாக வகுக்கப்படும். ஆரம்பத்தில் இவற்றின் வழங்கப்பட்ட மூலதனமாக ரூ. 10 மில்லியன் அமையும். இத்தொகை முழுவதையும் மத்திய வங்கியே இடும். இரண்டு ஆண்டு காலத்தின் பின்பு வழங்கப்பட்ட மூலதனத்தின் 49% ஐ உள்ளூர் வர்த்தக வங்கிகட்கும் கூட்டுறவுச் சங்கங்கட்கும் பகிர்ந்தளிக்கும். எனினும் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்யக்கூடிய பங்குகளின் எண்ணிக்கை வழங்கப்பட்ட மூலதனத்தின் 10% ஐ விஞ்சலாகாது.

**முகாமை:**

பிகிஅவ களின் முகாமைக்கு ஐந்து உறுப்பினரைக் கொண்ட இயக்குனர் சபை பொறுப்பாக இருக்கும். இவர்களுள் மூவர் மத்திய வங்கியின் பணச் சபையால் நியமிக்கப்படுவர். ஏனைய இருவரும் பிகி வங்கியின் பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவர். பொதுச் சபை அமைக்கப்படும் வரை இவர்களும் மத்திய வங்கியால் நியமிக்கப்பட்டவர்களாகவே அமைவர். இவர்களில் ஒருவர் இச்சபையின் தலைவராக மத்திய வங்கியால் நியமிக்கப்படுவார்.

**தன்மை:**

பிகிஅவ கள் வர்த்தக வங்கிளின் பண்புகளையும் அபிவிருத்தி வங்கிகளின் பண்புகளையும் ஒருங்கே கொண்டனவாக அமைந்திருக்கும்.

**அதிகாரங்கள்:**

செயற்பாடுகள், முகாமை என்பவற்றைப் பொறுத்தவரை இவை பூரண தன்னுதிக்கம் கொண்ட கூறுகளாகக் செயற்படும்.

**கிளைகள்:**

இவை தனிவங்கியமைப்பைக் கொண்ட வங்கிகளாயினும் குறித்த பிராந்தியத்துக்குள் கிளைகளை ஆரம்பிக்கும் அதிகாரம் கொண்டவையாகும்.

## நடைமுறையில்:

முதல் பிகிஅவ களுத்துறை மாவட்டத்திலுள்ள புளத் சிங்கள கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குருணுகலை மாவட்டத்தில் உள்ள குளியாப்பிட்டிய கிராமத்திலும் மாத்தறை மாவட்டத்தில் உள்ள யட்டியான கிராமத்திலும் அனுராதபுர மாவட்டத்தில் உள்ள மிகிந்தலைக் கிராமத்திலும் பிகிஅவ கள் ஏற்படுத்தப்பட்டன. பரீட்சார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட இந்த பிகிஅவ கள் வெற்றிகரமாகச் செயலாற்றியுள்ளன. 1985 இன் முடிவில் இந்நான்கு வங்கிகட்கும் மொத்தமாக 21 கிளைகள் காணப்பட்டன. ரூ. 3 மில்லியன் பெறுமதியான 12,500 சேமிப்பு கணக்குகளையும் ரூ. 3 லட்சம் பெறுமதியான 33 நிலையான வைப்புக் கணக்குகளையும் இவை ஆரம்பித்திருந்தன. சேமிப்புக் கணக்குகளின் சராசரிப் பருமன் ரூ. 248/- ஆகவும் நிலையான வைப்புக் கணக்குகளின் சராசரிப் பருமன் ரூ. 940/- ஆகவும் காணப்பட்டது. 1986 ன் ஈற்றில் இவ் வங்கிகளில் திரட்டப்பட்ட சேமிப்பின் தொகை ரூ. 17 மில்லியன் ஆக அதிகரித்திருந்தது. 1986 இல் அம்பாந்தோட்டையில் மேலுமொரு பிகிஅவ ஆரம்பிக்கப்பட்டது.

**கடன் வழங்கல்:**

1985 இன் ஈற்றில் இவை ரூ. 4·8 மில்லியன் பெறுமதியான 1104 கடன்களை வழங்கியிருந்தன.

இவற்றுள் 42% மானவை விவசாயத்துக்கும் 21% மானவை சிறு கைத்தொழிலுக்கும் வழங்கப்பட்டிருந்தன. 1986 இன் ஈற்றில் இவை மொத்தமாக ரூ. 37 மில்லியன் கடன்களை வழங்கியிருந்தன. இவற்றின் 44% மானவை விவசாயத்திற்கும் 23% மானவை சிறுகைத்தொழிலுக்கும் வழங்கப்பட்டிருந்தன. 1985 ஈற்றில் வழங்கப்பட்ட கடன்களின் சராரரிப் பருமன் ரூ. 4391/- ஆகக் காணப்பட்டது. இவற்றுள் மாத்தறை பிகிஅவ யால் வழங்கப்பட்ட கடன்களின் சராசரிப் பருமன் ரூ. 1,683/- ஆகவும் அனுராதபுர பிகிஅவ யால் வழங்கப்பட்ட கடன்களின் சராசரிப் பருமன் ரூ. 10,251/- ஆகவும் அமைந்திருந்தது.

## எதிர்காலத்திட்டம்:

1987 பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி கேகாலை மாவட்டத்தில் மேலுமொரு பிகிஅவ ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில் புத்தளம் கண்டி ஆகிய பகுதிகளிலும் பிகிஅவ களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மதிப்பீடு:

**1. கடன் அறவீடு:**

இவ் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களில் 97% — 99% மானவை பூரணமாக அறவிடப்பட்டுள்ளதாக மத்தியவங்கி அறிவித்துள்ளது. உயர்ந்த அறவீட்டு விகிதம் இப் பரீட்சார்த்த முயற்சியின் வெற்றியின் அளவுகோலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இது வரை ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு கடன் வழங்கு திட்டங்களில் ஆரம்ப காலங்களில் கடன் அறவீட்டு விகிதம் உயர்வாக காணப்பட்டபோதும் காலப் போக்கில் அது வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. எமது இந்த அனுபவத்தின் அடிப்படையில் இம் முயற்சியின் பலாபலன்களை குறுகிய இக்காலப் பகுதியினுள் இறுதியாக மதிப்பிட்டுவிட முடியாது. எனினும் உயர்ந்த அறவீட்டு விகிதம் உற்சாகமளிப்பதாகவே உள்ளது.

**ஊழியர்:**

அத்துடன், ஊழியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றினை அமைத்து கிராமிய வங்கியியல் ஊழியர்களை மத்திய வங்கி பயிற்றுவித்து வருகின்றது. பிகிஅவ கட்கு ஆட்சேர்க்கும்போது கல்வித் தகைமைகளைப் பிரதானமாக கருதாது கிராமிய மனப்பாங்கினை முக்கியமாகக் கருதியே ஊழியர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனல் இத்திட்டம் வெற்றிபெறும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

**மேற்பார்வை:**

இதுவரை காலமும் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் தோல்விக்கு தொடர்ச்சியான மேற்பார்வையின்மை முக்கிய காரணங்களில் ஒன்ருன இனங் காணப்பட்டுள்ளது. பிகிஅ வங்கிகளில் இக்குறைபாடு நீக்கப்பட்டுள்ளது. ஆரம்ப முதல் இறுதிவரை தொடர்ச்சியான மேற்பார்வை வங்கியால் மேற்கொள்ளப்படும்.

**தாமதம்:**

உரிய காலத்தில் கடன் கிடைக்காமை முன்னைய திட்டங்களின் தோல்விக்கு களம் அமைத்தது. கடனுக்கு விண்ணப்பித்த விவசாயிகள் பலதடவை வங்கி கட்கும் ஏனைய அலுவலகங்களுக்கும் செல்ல வேண்டி இருந்தது. இதனல் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன் விரக்தி மனப்பாங்கும் அவர்களிடையே ஏற்பட ஏதுவாயிற்று. இந்நிலை பிகிஅவ திட்டத்தில் அகற்றப்பட்டுள்ளது. இவ்வங்கிகளின் வெளிக்கள ஊழியர் விவசாயிகளிடையே வாழ்பவர்கள். அவர்கள் கடன் விண்ணபத்துடன் தொடர்பான அனைத்துப் பணிகளையும் தாமாக நிறைவேற்றி விடுவர். மேலும் கடன் பாசறைகளை அமைப்பதன் மூலம் கடன் விண்ணப்பங்கள் ஒரே தடவையில் பரிசிலனைக்குட்படுத்தப் படுகின்றன. இதனல் தாமதமோ விரக்தி நிலையோ ஏற்பட இடம் இல்லை. ஐம்பது மைல் சுற்றுடலில் வாழும் ஒவ்வொரு கிராமவாசியையும் வங்கியின் வெளிக்கள ஊழியர் நன்கு அறிந்தவராக இருப்பார்.

**மத்திய வங்கியின் பங்களிப்பு:**

இதுவரை காலமும் செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு கடன் உத்தரவாதம், மீள் நிதி வசதிகள் என்பவற்றை மட்டுமே மத்திய வங்கி வழங்கி வந்தது. பிகிஅவ கள் மத்திய வங்கியின் நேரடிக் கண்காணிப்புக்குள்ளாகின்றன.

**தலையீடு:**

மத்திய வங்கியின் நேரடிப் பங்களிப்பின் காரணமாக சமூகத்தின் செல்வாக்கு மிக்க பிரிவினரின் தலையீடு இவற்றின் கடன் வழங்கலில் காணப்படுவதில்லை.

**2. கடன்பகிர்வு:**

விவசாயம் முதன்மைத்துறையாக அமைந்திருந்த போதும் 30-6-85 இல் வெளிநின்ற கடன்களுள் முழு வங்கி முறையும் 8·5% கடன்களை மட்டுமே வழங்கியிருந்தது. அதே திகதியில் மக்கள் வங்கி ரூ. 11 பில்லியன் கடன்களை வழங்கியிருந்தது. அவற்றுள் 12·8% மட்டுமே விவசாயக் கடன்களாக அமைந்திருந்தன. இதில் இருந்து முதன்மைத்துறையான விவசாயம், வங்கி முறையால் எந்த அளவுக்கு புறக்கணிக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகின்றது.

பிகிஅவ வழங்கிய அனைத்துக் கடன்களும் கிராமியத் துறைக்கு வழங்கப்பட்டிருப்பதுடன் அவற்றுள் 44% மானவை விவசாயத்துறைக்கு வழங்கப்பட்டிருப்பதில் இருந்து கிராமிய மறுமலர்ச்சியில் இவ் அமைப்பு ஏற்படுத்தக் கூடிய வலுவான தாக்கத்தை உணர முடிகின்றது.

**3. வங்கிப் பரம்பல்:**

கிராமியத்துறையை வலுவுள்ளதாக மாற்றுவதற்காக மக்கள் வங்கி கிராமிய வங்கி அமைப்பை ஏற்படுத்தியது. முதற்கிராமிய வங்கி 1964 இல் ஏற்படுத்தப்பட்டது. 4 ஆண்டுகளின் பின்னர் 1967 இல் 27 கிராமிய வங்கிகள் காணப்பட்டன. ஆனால் பிகிஅவ அலுவலகங்களின் எண்ணிக்கை ஒரு ஆண்டு காலப் பகுதியினுள் 21 ஆக அதிகரித்திருப்பது உற்சாகமளிப்பதாக உள்ளது.

**4. வைப்புத்திரட்டல்:**

கிராமிய வங்கி முறையானது 1985 ஈற்றில் ரூ. 1 பில்லியன் வைப்புகளைத் திரட்டியிருந்தது. ஆனால் அதனால் வழங்கப்பட்ட கடன்களோ ரூ. 575 மில்லியனுகக் காணப்பட்டது. எனவே கிராமப் புறங்களில் திரட்டப்பட்ட வளங்களில் ரூ. 525 மில்லியன் பெறுமதியானவை நகர்ப் புறங்களுக்கு மாற்றப்பட்டன. கிராமங்களின் அபிவிருத்திக்கென நியாயமாக முதலிடப் பட்டிருக்க வேண்டிய வளங்களை நகர்ப் புறங்கட்கு மாற்றுவதையே கிராமிய வங்கி அமைப்பு சாதிக்கக்கூடியதாக இருந்தது. அதேவேளையில் பிகிஅவ கள் 1986 இன் ஈற்றில் ரூ. 17 மில்லியன் வைப்புகளை திரட்டி இருந்தன. ஆனால் அவை ரூ. 37 மில்லியன் பெறுமானமுள்ள கடன்களை வழங்கியிருந்தன. எனவே பிகிஅவ கள் நகர்ப்புறத்தில் இருந்து வளங்களை கிராமியப் புறங்களுக்கு மாற்றும் பணியில் ஈடுபட்டிருத்தலை அறிய முடிகின்றது.

## முடிவுரை:

பயன்படுத்தப்படாத வளங்கள் கொண்ட துறையாக கிராமியத்துறை தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்றது. இத்துடனன்றி இத்துறையின் வளங்கள் ஏனைய துறைகளின் வளர்ச்சிக்கென மாற்றப்பட்டும் வருகின்றன. இடப்பரப்பின் அடிப்படையிலும் குடித்தொகையின் அளவிலும் மிகப் பெரும்பான்மையான பங்களிப்பை வழங்கும் கிராமத்துறையின் மறுமலர்ச்சியிலேயே நாட்டின் அடிப்படையான வளர்ச்சி தங்கியுள்ளது. இத்துறைக்கெனத் தன்னை அர்ப்பணித்துள்ள பிகிஅவ களின் செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய வெற்றி உண்மையான அபிவிருத்திக்குக் களம் அமைப்பதாக அமையும். இக்குறுகிய காலத்தில் 4000 நிகழ்ச்சித் திட்டங்கட்கு நிதியீட்டம் செய்வதற்காக 5000 கடன்களை வழங்கியிருக்கும் பிகிஅவ களின் செயற்பாடு நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும்.

## இலங்கை வங்கியின் புதிய தலைவர்

இலங்கை வங்கியின் புதிய தலைவராக கலாநிதி நிமால் சந்தரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இவர் மத்தியவங்கியின் பொருளாதார ஆராய்ச்சி இயக்குனராகப் பதவிவகித்தவர் ஆவார். மத்திய வங்கியின் விவசாய கடன் பிரச்சினைபற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்த மத்தியவங்கி பொருளியலாளர் என இவரை வர்ணிக்கலாம்.

கிராமிய விவசாயம், சிறு கைத்தொழில், சுயதொழில் புரிவோர் என்போரின் அபிவிருத்தியில் இவர் அதிக நாட்டம் கொண்டவராவார். விவசாயியை வர்த்தகக்கண்ணோட்டத்துடன் அணுகாது அவர்களின் தேவைகளை புரிந்து அவர்கட்கு ஏற்றவிதத்தில் பணியாற்ற வேண்டியது அவசியமாகும் என உணர்ந்தவர் கலாநிதி சந்தரத்ன.

விவசாயக் கடன்களைப் பொறுத்தவரையில் அரச வங்கிகள் இரண்டும் அதிகளவு முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதும் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த அவை தவறியுள்ள நிலையில் இத்துறையில் தணியாத தாகம்கொண்ட புதிய தலைவர் நியமிக்கப்படுவது இப்பிரச்சனையின் அணுகுமுறையில் புதிய பரிமாணங்களை நிச்சயமாக உருவாக்கும் என நம்பப்படுகின்றது. இவரின் நியமனத்தைத் தொடர்ந்து இதுவரை காலமும் கிராமிய கடன்துறையில் தனியாட்சி நடாத்தி வந்த மக்கள் வங்கி பலமிக்க போட்டியாளன் ஒருவரை எதிர்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளது.

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# பெறுமானத் தேய்வு (DEPRECIATION)

சி. யோகேஸ்வரன், B. A. (Jaf.)
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி

பெறுமானத் தேய்வு என்பது நிலையான சொத்துக்களின் பெறுமதி அதன் பயன்பாடு காரணமாக குறைவடைவதைக் குறிக்கும். சொத்துக்களின் பயன்பாட்டின் அளவு, அவற்றின் பாவிப்பில் தங்கியுள்ளது. இரண்டு அல்லது மூன்று மாற்றுக்களில் (shitts) ஒரே சொத்தினை ஈடுபடுத்தும் போது சொத்துக்கள் பெருமளவு தேய்வடைகின்றன. ஆனல் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும்போது இத்தகைய நிலை ஏற்படமாட்டாது. இது பெரும்பாலும் இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களுக்கு பொருத்தமானதாகும். இயந்திரம் பயன்படுத்தப்படாமல் இருக்குமாயின் அது தனது செயல்திறனை இழப்பதுடன் ஒரு காலகட்டப்பகுதியில் முற்றிலும் பயனற்றதாகிவிடும். அவ்வாறின்றி இயந்திரம் வழக்கொழிந்து போகவும் கூடும். மேலும் நுகர்வோனின் சுவை வேறு ஒரு பொருளுக்கு மாறும்போதும் குறிப்பிட்ட இயந்திரம் தனது மதிப்பை இழந்துவிடுகின்றது. பெறுமானத் தேய்வுக்கான நிதியம் கணக்கில் ஒதுக்கப்பட்டாலே தவிர இறுதிக் கணக்குகள் சரியான இலாபத்தை காட்டுவனவாக அமையமாட்டா.

## பெறுமானத் தேய்வின் அளவு

பெறுமானத் தேய்வின் அளவு பல காரணிகளில் தங்கியுள்ளது. அவையாவன:

1. ஆரம்பச் செலவு
2. திட்டமிட்ட தொழில் வாழ்க்கை
3. திட்டமிட்ட தொழில் வாழ்க்கையின் இறுதி நிலை

ஆரம்பத்தில் இடப்பட்ட செலவு திட்டமிட்ட தொழில் வாழ்க்கையினை பொறுத்தது. எனவே திட்டமிடப்பட்ட தொழில் வாழ்க்கை இன்றியமையாததாக உள்ளது.

பெறுமான தேய்வின் அளவு குறிப்பிட்ட சொத்தின் தன்மையைப் பொறுத்து வேறுபடும். இப் பெறுமதியின் குறைப்பும் சொத்து கணக்கின் முடிவில் இருந்து தெரியக்கூடியதாயிருக்கும். இதன் விளக்கம் சொத்துகளின் பெறுமதி எழுதப்பட்ட பெறுமதியில் கணிக்கப்படல் வேண்டும் என்பதாம். எழுதப்பட்ட பெறுமதி சொத்தின் சந்தைப் பெறுமதிக்குச் சமமாக அமையமாட்டாது. இச் சொத்தின் சந்தைப் பெறுமதி பாவிக்கப்படாத மூலதன வெளியீடு என திட்டமிட்ட வாழ்க்கையில் கருதப்படுகிறது. செலவை கருத்தில் கொண்டே சொத்து கணக்கு தீர்மானிக்கப்படுகிறது. பெறுமானத்தேய்வு பெறுமானத்தேய்வு – ஒதுக்கக் கணக்கின் மூலம் வெளிக்கொணரப்படுகிறது. சொத்தின் செலவு அடிப்படையிலான விலைக்கும், திரண்ட பெறுமானத்தேய்விற்கும் இடையிலுள்ள வேறுபாடு பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கின் மூலம் முடிவடையாத மூலதனச் செலவாக காட்டப்படுகின்றது.

பெறுமானத் தேய்வு கணக்கியல் இரண்டு, நிபந்தனைகளை கொண்டுள்ளது.

1. இது உற்பத்தி செலவின் ஒரு பகுதி. இது விற்பனை அல்லது வருமானத்தில் அறவிடப்படாவிட்டால் இலாபத்தினை உருவாக்க முடியாது.
2. சொத்தின் சிறப்புத்தேர்ச்சி கண்டுபிடிக்கப்படல் வேண்டும். இது ஒருவித நிதியக் கொள்கையாகும்.

## பெறுமானத் தேய்வு கணிப்பிடும் முறைகள்

**1. நேர்கோட்டு முறை அல்லது மாறுப்பாக முறை:**

இம்முறையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட வீதம் சொத்தின் கொள்விலையில் பெறுமானத் தேய்வாக ஒதுக்கப்படுகிறது. இதில் ஒவ்வொரு ஆண்டும் பெறுமானத்தேய்வு செய்யவேண்டிய தொகை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கப்படுகிறது.

$$D = \frac{V - S}{n}$$

இங்கு D — ஒரு வருடத்தின் பெறுமான தேய்வு
V — குறித்த சொத்தின் விலை
S — ஆயுள் முடிவில் சொத்து தேறும் விலை
n — எதிர்பார்க்கக்கூடிய சொத்தின் ஆயுள்

ஒரு சொத்து ஆற்றும் சேவை அதன் வாழ்நாள் முழுவதும் ஒரே சீராக இருப்பின் இம்முறை சிறந்ததாகும். இம் முறையில் பெறுமானத் தேய்வு வீதம் பின்வருமாறு கணிக்கப்படும்.



SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

$$\text{பெறுமானத்தேய்வு வீதம்} = \frac{\text{ஆயுள் முடிவில் சொத்து தேறும் தொகை}}{\text{சொத்தின் கிரயம்}} \times 100$$

உ + ம்:

1-1-78 இல் ஒரு இயந்திரம் 30,000/- க்கு கொள்வளவு செய்யப்பட்டது. இந்த இயந்திரம் 5 வருடங்கள் சேவை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. 5 வருட முடிவில் சொத்தின் பெறுமதி 5000/- என மதிப்பிடப்படுகிறது. பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையில் கணிக்கப்படுகிறது. 3 வருடங்களின் கணக்குகள் பின்வருமாறு இருக்கும்.

இயந்திரக் க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-1-78 | காசு | 30 000 | 31-12-78 | மீதி கீ/கொ/ சென்றது | 30 000 |
| 1-1-79 | மீதி கீ/கொ/ வந்தது | 30 000 | 31-12-79 | மீதி கீ/கொ/ சென்றது | 30 000 |
| 1-1-80 | மீதி கீ/கொ/ வந்தது | 30 000 | 31-12-80 | மீதி கீ/கொ/ சென்றது | 30 000 |

பெறுமானத் தேய்வு ஒதுக்க க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31-12-78 | மீ/கீ/கொ/செ | 5 000 | 31-12-78 | பெறுமானத் தேய்வு க/கு | 5 000 |
| 31-12-79 | மீ/கீ/கொ/செ | 10 000 | 1-1-79 | மீதி கீ/கொ/ வ | 5 000 |
| | | | 31-12-79 | பெறுமானத் தேய்வு க/கு | 5 000 |
| | | 10 000 | | | 10 000 |
| 31-12-80 | மீ/கீ/கொ/செ | 15 000 | 1-1-80 | மீ/கீ/கொ/ வ | 10 000 |
| | | | 31-12-80 | பெறுமானத் தேய்வு க/கு | 5 000 |
| | | 15 000 | | | 15 000 |

பெறுமானத் தேய்வு க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31-12-78 | பெறுமானத் தேய்வு ஒதுக்க க/கு | 5 000 | 31-12-78 | இலாப நட்ட க/கு | 5 000 |
| 31-12-79 | பெறுமானத் தேய்வு ஒதுக்க க/கு | 5 000 | 31-12-79 | இலாப நட்ட க/கு | 5 000 |
| 31-12-80 | பெறுமானத் தேய்வு ஒதுக்க க/கு | 5 000 | 31-12-80 | இலாப நட்ட க/கு | 5 000 |

**2 குறைந்து செல்லும் பாகமுறை அல்லது ஒடுங்கு பாகமுறை:**

இம்முறையில் பெறுமானத் தேய்வு சொத்தின் பதிவளிக்கப்பட்ட பெறுமதியில் ஒரு குறிப்பிட்ட வீதமாக கணிக்கப்பட வேண்டும். இம்முறை பொதுவாக பொறிவிருட்சம், தளபாடங்கள், பொருத்துக்கள் போன்ற சொத்துக்களுக்கு பயன்படுகிறது.

**இம்முறையிலுள்ள நன்மைகள்:**

1. சொத்தின் உழைக்கும் திறன் ஆண்டுகள் போகப் போக குறைகின்றது. ஆகவே சொத்திலிருந்து கூடிய பயனைப் பெறும்போது கூடிய தொகையையும், குறைந்த பயனைப் பெறும்போது குறைந்த தொகையும் பெறுமானத்தேய்வாகப் பதிவழிக்கப்படுகிறது.

2. பெறுமானத் தேய்வு செய்யும் தொகை ஒவ்வொரு ஆண்டும் குறைந்து செல்கின்றது. ஆனல் சொத்தினை திருத்துவதற்காக ஏற்படுகின்ற செலவு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துச் செல்கின்றது. ஆகவே குறைந்து செல்கின்ற பெறுமானத் தேய்வுத் தொகையினை அதிகரித்துச் செல்லும் திருத்தச்செலவு சமப்படுத்துகிறது.

3. இம்முறையில் பெறுமானத் தேய்வு செய்தால் சொத்தின் ஆயுள் முடிவில் ஒரு சிறு மீதி காணப்படும்.

**குறைபாடுகள்:**

1. குறைந்த விகித தொகையே பின்பற்றவேண்டியுள்ளதால் சொத்தின் ஆயுட்காலத்துள் பெறுமானத் தேய்வுத் தொகையினை பதிவளிக்க முடியாது.

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM



SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

2. இம் முறை இலகுவானது என்பதால் சொத்துக்கள் அனைத்தும் ஒரே கணக்கில் இணைக்கப்படுகின்றன. இதனால் தனிப்பட்ட சொத்தின் ஏட்டுப் பெறுமதியை குறித்த நேரத்தில் அறிய இயலாதிருக்கும்.

உ + ம் :

ஒரு இயந்திரம் 1-4-79 இல் ரூபா 20 000 கொள்வனவு செய்யப்பட்டது. பெறுமானத் தேய்வு ஒடுங்குபாக முறையில் 10% கணிக்கப்படுகிறது. சொத்து கணக்கு குறைத்து எழுதிய பெறுமதியில் பராமரிக்கப்படுகிறது. 3 வருடங்களின் கணக்கு பின் வருமாறு இருக்கும்.

இயந்திர க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-4-79 | காசு | 20 000 | 31-3-80 | பெறுமானத் தேய்வு | 2 000 |
| | | | | மீதி கி/கொ/செ | 18 000 |
| | | 20 000 | | | 20 000 |
| 1-4-80 | மீ/கி/கொ/வ | 18 000 | 31-3-81 | பெறுமானத் தேய்வு | 1 800 |
| | | | | மீதி கி/கொ/செ | 16 200 |
| | | 18 000 | | | 18 000 |
| 1-4-81 | மீ/கி/கொ/வ | 16 200 | 31-3-82 | பெறுமானத் தேய்வு | 1 620 |
| | | | | மீ/கி/கொ/செ | 14 580 |
| | | 16 200 | | | 16 200 |

பெறுமானத் தேய்வு க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31-3-80 | இயந்திர க/கு | 2 000 | 31-3-80 | இலாப நட்ட க/கு | 2 000 |
| 31-3-81 | இயந்திர க/கு | 1 800 | 31-3-81 | இலாப நட்ட க/கு | 1 800 |
| 31-3-82 | இயந்திர க/கு | 1 620 | 31-3-82 | இலாப நட்ட க/கு | 1 620 |

**3. ஆண்டுத் தவணை முறை:**

இம் முறையில் பெறுமானத் தேய்வு செய்யும் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்து, மூல தனத்தின் ஒரு முதலீடாக கருதப்படும். குறிப்பிட்ட சொத்தில் முதலீடு செய்யப்படும் தொகை வேறு முதலீடுகளில் முதலீடு செய்யப்படின் இம் முதலீடு ஏதோ வட்டியினை உழைக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகிறது. சொத்தின் கொள்விலையுடன் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நிலையான வட்டிவீதம் சேர்க்கப்பட்டு அதன்பின் சொத்தும் வட்டியும் சேர்த்து சம தவணை முறையில் பெறுமானத் தேய்வாகப் பதிவளிக்கப்படுகிறது. இதில் பெறுமானத் தேய்வு செய்ய வேண்டிய தொகை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கப்படும்.

$$V = \frac{a}{i}\left\{1 - \frac{a}{(1+i)^n}\right\}$$

இங்கு V — சொத்தின் தற்போதைய பெறுமானம்

i — வட்டித் தொகை

n — எதிர்பார்க்கக் கூடிய சொத்தின் ஆயுள்

a — ஆண்டு பெறுமானத் தேய்வு

உ + ம் :

ஒரு குத்தகையின் 1980 ஆம் ஆண்டு பெறுமானம் ரூ. 100 000/-. நான்கு வருடங்களுக்கு இக் குத்தகை பயன்படுத்தப்படுகிறது. பெறுமானத் தேய்வு ஆண்டுத் தவணை முறையில் கணிக்கப்படுகிறது. வட்டி 5% அறவிடப்படுகிறது. குத்தகையின் தற்போதைய பெறுமானம் ரூ. 1/- எனின் 0·282012 ரூபா பெறுமானத் தேய்வாக அறவிடப்படும்.

தற்போதைய பெறுமானம்
ரூ. 100 000/-

ஆண்டு பெறுமானத் தேய்வு
ரூ. 100,000 × 0·282 012 = ரூ. 28,201

குத்தகை க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1980 | காசு | 100 000 | 1980 | பெறுமானத் தேய்வு | 28 201 |
| | வட்டி | 5 000 | | மீ/ கீ/ கொ/ செ | 76 799 |
| | | 105 000 | | | 105 000 |
| 1981 | மீ/ கீ/ கொ/ வ | 76 799 | 1981 | பெறுமானத் தேய்வு | 28 201 |
| | வட்டி | 3 840 | | மீ/ கீ/ கொ/ செ | 52 438 |
| | | 80 639 | | | 80 639 |
| 1982 | மீ/ கீ/ கொ/ வ | 52 438 | 1982 | பெறுமானத் தேய்வு | 28 201 |
| | வட்டி | 2 622 | | மீ/ கீ/ கொ/ செ | 26 859 |
| | | 55 060 | | | 55 060 |
| 1983 | மீ/ கீ/ கொ/ வ | 26 859 | 1983 | பெறுமானத் தேய்வு | 28 201 |
| | வட்டி | 1 342 | | | — |
| | | 28 201 | | | 28 201 |

**4. அருகல் முறை அல்லது ஒழிந்து போகும் முறை**

அருகல் முறை சுரங்கங்கள் போன்ற சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு செய்வதற்காக பின்பற்றப்படுகிறது. இங்கு சுரங்கத்தில் கிடைக்கக்கூடிய மொத்த பொருட்களின் அளவு கணக்கிடப்படுகிறது. அதிலிருந்து குறிப்பிட்ட வருடத்தில் பெறப்படும் தொகையை அளவிட்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படுகிறது. நூல்களின் பதிப்புரிமை போன்றவற்றிலும் இதே முறையே உபயோகிக்கப்படுகிறது.

உ + ம்:

ஒரு சுரங்கம் 1985 ல் ரூ. 5 00,000/- க்கு பெறப்பட்டது. சுரங்கத்திலிருந்து பெறப்படும் பொருள் 1 000 000 தொன்களெனவும், இதில் 75% ஐ பெற்றுக்கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. வெளியீடு 1985 இல் 24 000 தொன்களாகவும், 1986 இல் 57 000 தொன்களாகவும் அமைந்தது. இக் கணக்கு பின்வருமாறு அமையும்:-

1 000 000 தொன்களின் 75% = 750 000 தொன்கள்

ஒரு தொன்னுக்கு அறவிட்ட தொகை
= ரூ. 500 000 ÷ 750 000
= ரூ. 0·67

சுரங்க க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1985 | காசு | 5 00 000 | 1985 | பெறுமானத்தேய்வு 24 000 × 0·67 | 16 000 |
| | | — | | மீ/கீ/கொ/செ | 4 84 000 |
| | | 5 00 000 | | | 5 00 000 |
| 1986 | மீ/கீ/கொ/வ | 4 84 000 | 1986 | பெறுமானத்தேய்வு 57 000 × 0·67 | 38 000 |
| | | — | | மீ/கீ/கொ/செ | 4 46 000 |
| | | 4 84 000 | | | 4 84 000 |

**5. மறுபடி விலை மதிப்பு முறை:**

சில சொத்துக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக கணக்கு வைத்திருப்பது கடினமாகும். எனவே சில வகையான சொத்துக்களுக்கு இம்முறை பின்பற்றப்படுகிறது. இது ஆக்கஉரிமை, சிறுகருவிகள் போன்றவற்றுக்குப் பின்பற்றப்படுகின்றது. வருட தொடக்கத்திலிருந்த பெறுமதிக்கும் வருட முடிவில் இருக்கும் பெறுமதிக்கும் இடைப்பட்ட வித்தியாசம் பெறுமானத்தேய்வாக கணிப்பிடப்படுகிறது.

உ + ம்:

சிறு கருவிகளின் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமானமும் அவற்றின் இறுதிப் பெறுமானமும் பின்வருமாறு:–

| | கொள்வனவு பெறுமானம் | இறுதி பெறுமானம் |
|---|---|---|
| 1983 | 20 000 | 17 000 |
| 1984 | 4 000 | 15 000 |
| 1985 | 5 000 | 11 000 |

சிறு கருவிகள் க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1983 | காசு | 20 000 | 1983 | பெறுமானத்தேய்வு | 3 000 |
| | | — | | மீ/கீ/கொ/செ | 17 000 |
| | | 20 000 | | | 20 000 |
| 1984 | மீ/கீ/கொ/வ | 17 000 | 1984 | பெறுமானத்தேய்வு | 6 000 |
| | காசு | 4 000 | | மீ/கீ/கொ/செ | 15 000 |
| | | 21 000 | | | 21 000 |
| 1985 | மீ/கீ/கொ/வ | 15 000 | 1985 | பெறுமானத்தேய்வு | 9 000 |
| | காசு | 5 000 | | மீ/கீ/கொ/செ | 11 000 |
| | | 20 000 | | | 20 000 |

**6. பெறுமானத் தேய்வு நிதி அல்லது ஆழ்நிதி முறை'**

இம் முறையில் பெறுமானத் தேய்வு தொகை ஒவ்வொரு ஆண்டும் இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெறுமானத் தேய்வு ஒதுக்க கணக்கில் செலவு வைக்கப்படுகிறது. அத்துடன் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட தொகையும், முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானமும் ஒவ்வொரு ஆண்டும் வியாபாரத்திற்கு வெளியில் முதலீடு செய்யப்படுகிறது. சொத்தினுடைய ஆயுட்காலம் வரைக்கும் இவ்வாறு செய்யப்படுகிறது. இம்முறையில் ஆயுட்காலம் முழுவதும் சொத்து அதன் கொள்விலையிலேயே காட்டப்பட்டிருக்கும். சொத்தின் ஆயுள் முடிவில் ஆழ்நிதிக் கணக்கு மீதி சொத்து கணக்கிற்கு மாற்றப்படுவதன் மூலம் சொத்து மீதியும் ஆழ்நிதி மீதியும் இல்லாது போகிறது.

இம் முறையில் பெறுமானத் தேய்வு செய்வதனுல் சொத்தின் ஆயுள் முடிவில் புதிய சொத்தினை கொள்வனவு செய்வதற்கு ஆழ்நிதி முதலீட்டை விற்று பணம் பெற்றுக் கொள்ளலாம். புதிய சொத்து கொள்வனவு செய்வதற்கு வியாபாரத்திலுள்ள பணத்தை பயன்படுத்தத் தேவையில்லை. இம்முறையில் பெறுமானத்தேய்வு செய்வதற்கு பின்வரும் சமன்பாட்டை உபயோகிக்கலாம்.

$$A = \frac{a}{i} \left\{(1 + i)^{n} - 1\right\}$$

இங்கு

A - கொள்விலை

a - ஆண்டு ஒதுக்கம்

i - வருடத்தின் வட்டித்தொகை

n - சொத்தின் எதிர்பார்க்கும் ஆயுட்காலம்

உ + ம்:

வரையறுத்த Y கம்பனி 1-7-1980 ல் ரூ 1 00 000/- இற்கு ஒரு இயந்திரத்தை கொள்வனவு செய்தது. இவ் இயந்திரம் 5 வருடங்கள் உபயோகிக்க முடியுமென நிறுவனம் கருதுகிறது. 5 வது வருடத்தில் சொத்து தேறும் தொகை 16 000/- ஆகும். ஆழ்நிதி முறை மூலம் பெறுமானத் தேய்வு செய்து 6 வது வருடத்தில் புதிய இயந்திரம் கொள்வனவு செய்வதென இயக்குனர் முடிவு செய்தனர். ஆழ்நிதி 5% வட்டிக்கு கம்பனிக்கு வெளியே முதலீடு செய்யப்படும். ஒவ்வொரு வருடமும் ஆனி 30 ல் கணக்குகள் முடிக்கப்படும். அடுத்த வருடம் ஆடி மாதம் முதல் வாரத்தில் ஆழ்நிதி முதலீடு செய்யப்படும்.

ஒரு ரூபா தேவை எனின் 5% வட்டிக்கு ரூபா 0.180975 ஒரு வருடத்தில் ஒதுக்கப்படும். முதலீடு கொள்விலையில் விற்கப்படும். தேறிய சொத்து ரூபா 15 000/- க்கு விற்கப்படும். புதிய இயந்திரம் ரூபா 1 20 000/- க்கு கொள்வனவு செய்யப்படும்.

தேவையான தொகை = 1 00 000 — 16 000
= 84 000/-

ஒருவருட ஒதுக்கம் = 0·180975 × 84 000
= 15 202/-

### ஆழ்நிதிக் க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30-6-81 | மீதி கீ/கொ/செ | 15 202 | 30-6-81 | இலாப நட்ட க/கு | 15 202 |
| 30-6-82 | மீதி கீ/கொ/செ | 31 164 | 1-7-81 | மீதி கீ/கொ/வ | 15 202 |
| | | | 30-6-82 | வட்டி | 760 |
| | | | | இலாப நட்ட க/கு | 15 202 |
| | | 31 164 | | | 31 164 |
| 30-6-83 | மீதி கீ/கொ/செ | 47 924 | 1-7-82 | மீதி கீ/கொ/வ | 31 164 |
| | | | 30-6-83 | வட்டி | 1 558 |
| | | | | இலாப நட்ட க/கு | 15 202 |
| | | 47 924 | | | 47 924 |
| 30-6-84 | மீதி கீ/கொ/செ | 65 552 | 1-7-83 | மீதி கீ/கொ/வ | 47 924 |
| | | | 30-6-84 | வட்டி | 2 396 |
| | | | | இலாப நட்ட க/கு | 15 202 |
| | | 65 552 | | | 65 522 |
| 30-6-85 | மீதி கீ/கொ/செ | 84 000 | 1-7-84 | மீதி கீ/கொ/வ | 65 522 |
| | | | 30-6-85 | வட்டி | 3 276 |
| | | | | இலாப நட்ட க/கு | 15 202 |
| | | 84 000 | | | 84 000 |

### ஆழ்நிதி முதலீட்டுக் க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-7-81 | வங்கி | 15 202 | 30-6-82 | மீதி கீ/கொ/செ | 15 202 |
| 1-7-82 | மீ/கீ/கொ/வ | 25 202 | 30-6-83 | மீதி கீ/கொ/செ | 31 164 |
| | வங்கி (15 202 + 760) | 15 962 | | | — |
| | | 31 164 | | | 31 164 |
| 1-7-83 | மீ/கீ/கொ/வ | 31 164 | 30-6-84 | மீதி கீ/கொ/செ | 47 924 |
| | வங்கி (15 202 + 1 558) | 16 760 | | | — |
| | | 47 924 | | | 47 924 |
| 1-7-84 | மீ/கீ/கொ/வ | 47 924 | 30-6-85 | மீதி கீ/கொ/செ | 65 522 |
| | வங்சி (15 202 + 2 396) | 17 598 | | | — |
| | | 65 522 | | | 65 522 |
| 1-7-85 | மீ/கீ/கொ/செ | 65 522 | 30-6-75 | வங்கி | 65 522 |

### இயந்திர க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-7-80 | வங்கி | 1 00 000 | 30-6-81 | மீதி கீ/கொ/செ | 1 00 000 |
| 1-7-81 | மீதி கீ/கொ/வ | 1 00 000 | 30-6-82 | மீதி கீ/கொ/செ | 1 00 000 |
| 1-7-82 | மீதி கீ/கொ/வ | 1 00 000 | 30-6-83 | மீதி கீ/கொ/செ | 1 00 000 |
| 1-7-83 | மீதி கீ/கொ/வ | 1 00 000 | 30-9-84 | மீதி கீ/கொ/செ | 1 00 000 |
| 1784 | மீதி கீ/கொ/செ/ | 1 00 000 | 30-6-85 | ஆழ்நிதி க/கு | 84 000 |
| | | | | காசு | 15 000 |
| | | | | இலாப நட்ட க/கு | 1 000 |
| | | 1 00 000 | | | 1 00 000 |
| 1-7-85 | வங்கி | 1 20 000 | | | |

**7. நட்ட ஈட்டு பத்திர முறை:**

இம்முறையும் ஆழ்நிதி முறை போன்றதாகும். ஆனல் இம்முறையில் நட்ட ஈட்டு பத்திரங்களில் முதலீடு செய்யப்படுகிறது. நட்ட ஈட்டு முறையில் நட்ட ஈட்டு கம்பனி ஒன்றிடமிருந்து நட்ட ஈட்டு பத்திரம் பெறப்பட்டு ஆண்டுதோறும் சொத்தின் ஆயுள் வரைக்கும் நட்ட ஈட்டு தவணைப் பணம் கட்டப்படுகிறது. சொத்தின் ஆயுள் முடிவில் புதிய சொத்து கொள்வனவு செய்வதற்கான பணம் நட்ட ஈட்டு பத்திரங்களை விற்று பெறப்படுகிறது. இதில் வட்டி வீதம் குறைவாக இருப்பினும் நட்ட ஈட்டு பத்திரங்களை விற்கும்போது குறைந்தளவு இழப்பு மட்டுமே ஏற்படும்.

உ + ம்:

ஒரு இயந்திரம் ரூபா 1 00 000/- க்கு கொள்வனவு செய்யப்பட்டது. இது 10 வருடங்கள் சேவை செய்யுமென மதிப்பிடப்பட்டது. இவ் இயந்திரத்திற்கு நட்ட ஈட்டு பத்திர முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகிறது. இதற்காக 1982 இல் நட்ட ஈட்டு பத்திரம் கொள்வனவு செய்யப்பட்டு ஒவ்வொரு வருடமும் ரூ 9 000/- நட்ட ஈட்டு கட்டணமாகச் செலுத்தப்படுகிறது. இது 4 % வருமானம் தரும் நட்ட ஈட்டுப் பத்திரமாகும். இவ்வாறு பெறப்படும் வருமானமும் மீண்டும் நட்ட ஈட்ட பத்திரத்திலேயே முதலீடு செய்யப்படுகிறது. 3 வருடத்திற்குரிய பெறுமானத் தேய்வு நிதிக்கணக்கையும் நட்ட ஈட்டு பத்திர முதலீட்டு கணக்கையும் பின்வருமாறு தயாரிக்கலாம்.

### பெறுமானத் தேய்வு நிதிக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1982 | மீதி கீ/கொ/செ | 9 000 | 1982 | இலாப நட்டக்கணக்கு | 9 000 |
| 1983 | மீதி கீ/கொ/செ | 18 360 | 1983 | மீ/கீ/கொ/வ | 9 000 |
| | | | | இலாப நட்டக் க/கு | 9 000 |
| | | | | வட்டி | 360 |
| | | 18 360 | | | 18 360 |
| 1984 | மீதி கீ/கொ/செ | 28 094 | 1984 | மீதி கீ/கொ/வ | 18 360 |
| | | | | இலாப நட்ட க/கு | 9 000 |
| | | | | வட்டி | 734 |
| | | 28 094 | | | 28 094 |

### நட்ட ஈட்டு பத்திர முதலீட்டு க/கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1982 | காசு | 9 000 | 1982 | மீதி கீ/கொ/செ | 9 000 |
| 1983 | மீதி கீ/கொ/வ | 9 000 | 1988 | மீதி கீ/கொ/செ | 1 8360 |
| | காசு | 9 000 | | | |
| | வட்டி | 360 | | | |
| | | 18 360 | | | 18 360 |
| 1984 | மீதி கீ/கொ/செ | 18 360 | 1984 | மீதி கீ/கொ/செ | 28 094 |
| | காசு | 9 000 | | | |
| | வட்டி | 734 | | | |
| | | 28 094 | | | 28 094 |

# இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் : ஒரு நிகழ்கால நோக்கு

மா சின்னத்தம்பி, B. A , B. Phill Hons.
வலய ஆசிரிய ஆலோசகர் – பொருளியல்

இலங்கையின் பொருளாதார, அரசியல் வரலாற்றில் 1977 க்கு பிற்பட்ட காலம் சார்பு ரீதியில் முக்கியமானதாயும், விமர்சனத்துக் குரியதாயும் காணப்படுகிறது. பொருளாதார கொள்கைகள், அரசியல் சமூக நெருக்கடிகளுடன் தொடர்புடையனவாயும் உள்ளன. தற்போதைய அரசாங்கம் பல புதிய பொருளாதார கொள்கைகளை, மேற்குலக நாடுகள் சார்ந்ததாயும், சர்வதேச பணச் சந்தை, வர்த்தகச் சந்தை சார்ந்ததாயும் பின்பற்றி ஒரு தசாப்த காலமாகிறது. அத்துடன் பல பாரிய செயல்திட்டங்களை அதிக மூலதனச் செலவுடன் சமகாலத்தில் தொடக்கி அமுலாக்குவதாலான சிக்கல்களையும் எதிர்கொள்கின்றது. யுத்த மேகங்கள் உள்நாட்டு வடிவில் அரச நிதியின்மீது சுமையாகவும், பொருளாதார எதிர்பார்க்கைகள் சார்ந்து அச்சுறுத்தலாகவும் அமைகின்றன. இத்தகைய பொருளாதார பகைப்புலத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்பற்றிய பார்வை அவசியமானதாயமையும்.

1977 ஜூலையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தனது புதிய கொள்கையின் செயற்பாடுகளை 1977 நவம்பர் மாதத்திலிருந்து தொடங்கிற்று. வர்த்தக தாராளமாக்கல் கொள்கையை கையாளத் தொடங்கிற்று. இது சர்வதேச வர்த்தகம் சார்ந்து மூலவள பரிவர்த்தனை அடிப்படையில் நீண்டகால நலன்களை இலங்கைக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையில் மொத்த உற்பத்தி, தொழில்வாய்ப்பு, விலைமட்டம், சென்மதி நிலுவை சார்ந்த சாதக நிலைமைகளை இது உருவாக்கும் எனப்பட்டது. தாராளக் கொள்கையானது நாணய மாற்றுவிகிதங்கள், நாணய, நிதிக் கொள்கைகள், கூலி பற்றிய கொள்கைகள், கடன் கொள்கைகள் போன்ற பலவற்றுடனும் தொடர்புடையதாகும். தற்போதைய அரசு மிகவும் கூர்மையுடன் கருத்திற்கொண்ட செயல்திட்டங்களில் ஒன்றே முதலீட்டு ஊக்குவிப்பு வலயமாகும்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் 1978 ஜூனில் கட்டுநாயக்கா பகுதியில் தொடக்கப்பட்டது. தொடங்கிய முதல் ஆறு மாதங்களில் தொழில் தொடங்கப்பட்டது. எனினும் 1980 அளவில் அனுமதிக்கப்பட்ட செயல்த்திட்டங்கள் 115 ஆக உயர்ந்தது. 1985 முடிவில் இது 211 ஆகவுயர்ந்தது.

இரண்டாவது வலயமாக 'பியகம' வில் ஒரு ஊக்குவிப்பு வலயம் தொடங்கும் முயற்சியில் இன்றியமையாத உள்ளமைப்பு அபிவிருத்திகள் நிறைவடைந்துள்ளன. 1985 முடிவின்படி ஆறு முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர். இதில் அதிக நீர் பயன்பாடிருக்கும் என்றும், அதற்கு ஏற்றதான பாரக் கைத்தொழில் விருத்திக்கான வலயமாக இது செயற்படும் என்றும் கருதப்படுகிறது. மூன்றாவது வலயமாக 'வெலிசர'வில் ஒரு ஊக்கு வலயம் அமைக்கப்படும். இதில் குறைந்தளவு நீர்ப்பாவனையுடையதாக மெல்லிய கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டு வலய எட்டுவருட செயற்பாடுகள் எதிர்பார்க்கைகளுடன் எவ்வாறான தொடர்பைக் கொண்டுள்ளன என்பது கவனத்திற்குரியதாகும். இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஏனைய சுதந்திர வர்த்தக வலயங்களிலிருந்து மாறுபட்ட குறிக்கோள்களைக் கொண்டதாகவே ஆக்கப்பட்டது. இதன் குறிக்கோள்கள்:–

அ) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியைத் தூண்டல்.

ஆ) பொருளாதாரத்தை அகலப்படுத்துவதும், அடித்தளத்தை பலப்படுத்துவதும்.

இ) அந்நிய முதலீடுகளை ஊக்குவித்தலும், மேம்படுத்தலும்.

ஈ) செலாவணி வருமான மூலங்களை பன்முகப்படுத்தலும், ஏற்றுமதி உழைப்பைத் தூண்டுதலும்.

உ) இலங்கையில் கைத்தொழில், வர்த்தக நிறுவனங்களை ஊக்குவித்தலும், நிறுவுதலை தூண்டலும், அபிவிருத்தியடையச் செய்தலும்.

இந்த குறிக்கோள்கள் இவ்வலயத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (GCEC) வினால் வெளியிடப்பட்டவையாகும். இந்த ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டின்

4 ஆம் இலக்க சட்டத்தின் 3 ஆம் பிரிவில் கூறப்பட்ட பகுதிகளை நிர்வகிக்கின்றது. மற்றைய நாடுகளின் சுதந்திர வர்த்தக வலயத்தைவிட இது சிறப்பாக

1) ஏற்றுமதி சார்ந்த முதலீடுகளை தூண்டுதல்

2) தொழில் வாய்ப்பைத் தூண்டுதல்

3) ஏற்றுமதி உழைப்பை அதிகரித்தல்

போன்ற நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் காட்டுகின்றது. தொடக்கத்தில் இலங்கையின் முதலீட்டு வலயத்துக்காக பல கவர்ச்சிகரமான தூண்டல்கள் காட்டப்பட்டன. உறுதியான அரசியல், புரட்சிகள் ஏற்படாத பாராளுமன்ற ஜனநாயகமுறை, ஏற்றுமதிச் சந்தைகள் கொண்ட செழிப்பான பொருளாதாரம், வர்த்தக கட்டுப்பாடுகள், தீர்வைத்தடைகளற்ற பாதுகாப்பு, அதிகூடிய உற்பத்தித் திறனுடைய தொழிற்படை குறைந்த கூலி மட்டத்தில் கிடைத்தல் திருப்திகரமான பொருளாதார உள்ளமைப்பு வசதிகள், மிகவும் விரிவான வங்கித்துறை, நிதிச் சேவைகள், சரியான சட்ட அணுகுமுறை ஒப்புமையற்ற வரிச்சலுகை, இலகுபடுத்தப்பட்ட நிர்வாக ஒழுங்குகள் போன்ற பலவும் கூறப்பட்டன.

இங்கு வரிச்சலுகைகள் 4 – 15 வருடங்கள் வரை வேறுபடுவனவாகவும் வரிவிடுதலை 2 – 10 வருடங்கள் வரை வேறுபடுவன வாகவும் கூறப்பட்டன. தொழில் வாய்ப்பு பெருக்கம் வரி விடுதலையுடன் 'இணைக்கப் பட்டது. இலங்கையின் தொழிலின்மையைக் குறைப்பது ஏற்றுமதி வருமான அதிகரிப்புடன் இணைக்கப் படுவதாக இருந்தது. அதாவது உள்நாட்டு ஊழியப் படை வருமானங்கள் பெறுதல் என்பது இலங்கையின் இறக்குமதி இயலளவினை அதிகரிக்கும். அந்நிய செலாவணி மீதியை உயர்த்துவதுடன் இணைக்கப் பட்டது. இத் தொடர்பு முறைக்காக அரசு வரிவிடுதலை மூலம் தனது அரசிறையை இழந்துவிட தயாராகியது. நீண்டகால நோக்கில் அரசு தன் வருவாயை உறுதிப்படுத்துவதற்காக நிகழ்கால அரசிறை இழப்புக்கு உடன்படுவதாக இதனைக் கொள்ளமுடியும். இத்திட்டப்படி நிறுவனங்கள் 100% வரிவிடுதலை பெறுதற்கு செயல்திட்டத்தின் தொழில் வாய்ப்பு அளவுக்கு ஏற்றதாக ஆகக் குறைந்த வரி விடுதலைத் தகுதி நிச்சயிக்கப்பட்டது. அவை

| செயல் திட்டத்தின் தொழில் வாய்ப்பு | வரிவிடுதலையின் இழிவு தகுதி |
|---|---|
| 100 வரை | 2 வருடங்கள் |
| 101 — 300 | 3 வருடங்கள் |
| 301 — 500 | 4 வருடங்கள் |
| 500 க்கு மேல் | 5 வருடங்கள் |

இந்த முறையில் இலங்கையில் வரிவிடுதலைகளின் மூலமும், குறைந்த கூலிக் கொடுப்பனவின் மூலமும் தமது உற்பத்திச் செலவினைக் குறைத்து, விலையை குறைந்த மட்டத்தில் நிர்ணயித்து, ஏற்றுமதிச் சந்தையில் உயர்ந்த மட்ட கேள்வியைப்பெற்று அதிக வருமானமும், இலாபமும் ஈட்டுவது இங்கு உள் நுழைந்த நிறுவனங்களின் பிரதான நோக்கமாக அமைந்தது. இதற்குரிய பண்ட உற்பத்தித்துறைகளையும் நாடலாயினர். இதனாலேயே உடை தயாரிக்கும் தொழில் பிரதான செயல்திட்டமாயிற்று. இத் தொழில் ஒரு ஊழியச் செறிவான தொழிற்துறையாகும். இதில் நியாயமான கல்வியறிவுள்ள, இலகுவில் நிர்வகிக்கக்கூடிய, குறைந்த கூலியில் அமர்த்தக் கூடிய பெண்களை அமர்த்திக்கொள்ளக்கூடியதாயும் அமைந்தது. வேலைநேரம், ஊழிய நாட்கள் என்பன கூலி மட்டங்களுடன் நேர்மையான தொடர்பினைக் கொண்டிருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படா திருத்தலை நடைமுறையில் காணமுடிகின்றது. தொழில் வாய்ப்பு அளவானது 1980 இல் 10,581 ஆயிருந்தது. இதில் 9,147 பேர் உடைதயாரிக்கும் தொழிலில் தொழில் வாய்ப்பு பெற்றனர் இது 1985 இன் முடிவில் முறையே 32,329 ஆகவும் 26,541 ஆகவும் உயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கடுத்த அதிக தொழில் வாய்ப்புத் தருவனவாக இரசாயனப் பொருட்கள் உற்பத்தி, உலோகமல்லா பொருள் உற்பத்தி துறைகளமைகின்றன. இந்த தொழில்வாய்ப்பு பெருக்கம் குருநாகல், கொழும்பு மாவட்டத்தவர்க்கு சிறப்பாக உதவின. எனினும் இதேகாலத்தில் ஏனைய மாவட்டங்களில் புடவை நெசவு, ஆடை தயாரிப்பு தொழில்களும், ஏனைய கைத்தொழில்களும் இறக்குமதித் தாராளமாக்கலால் சிதைக்கப்பட்டிருந்தன. இவை உள்ளூர் மட்டத்தில் முறைமையற்ற வகையில் தொழில் வாய்ப்புக்களை மறுத்தன. குறிப்பாக தாழ் வருமான, நடுத்தர வருமான குடும்பத்தவர்கள் தொழில் இழந்தனர். மின்தறி, கைத்தறி தொழில்கள் கைவிடப்பட்டன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், நடுத்தரத் தொழிற்துறையினரும் இறக்குமதி மூலப் பொருள் விலையுயர்வு, இறக்குமதி தரமான பொருளின் சந்தை கைப்பற்றல் சார்ந்து நட்டமடைந்ததால் ஆட்குறைப்பு செய்தனர். இவ்வாறு சமனற்ற தொழில் நிலையொன்று உயர்ந்துள்ளமை நோக்குதற்குரியது. இந்த நோக்கில்தான் பின்பு இவற்றைப் பாதுகாக்க செயற்கைப் புடவைகள் மீது 100% வரை அதாவது சதுரமீற்றருக்கு 40 ரூபாவும், பருத்திப்புடவைகள் மீது 100% வரை அதாவது 25 ரூபா வரை தீர்வைகள் விதிக்கப்பட்டன. மத்திய வங்கி அறிக்கை "உள்நாட்டுப் புடவைக் கைத்தொழிலைப் பாதுகாப்பதே புடவை மீதான தடையின் குறிக்கோளாயிருந்தது. ஆனல் கணிசமான கள்ளக் கடத்தலும் ஏற்றுமதித்தயாரிப்பாளரிடமிருந்து இறக்குமதி செய்

யப்பட்ட புடவைகள் வெளிச்சந்தை சென்றமையும் இக் குறிக்கோளினை அழித்துவிட்டன" என (1985ஆம் ஆண்டு) குறிப்பிடுவதும் ஒப்புநோக்கத்தக்கது.

இவ்வலய ஏற்றுமதிகளை நோக்கும்போது அந்நியச் செலாவணி உழைப்பு 1980 இல் ரூ. 505·3 மில்லியனாகவேயிருந்தது. இதில் தயாரிக்கப்பட்ட உடையின் ஏற்றுமதிப்பங்கு ரூ. 470·1 மில்லியனாக இருந்தது. 1984 இல் இது முறையே ரூ. 3537·4 மில்லியனாகவும் ரூ. 2888·1 மில்லியனாகவும் காணப்பட்டன. ஆனால் 1984 இல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றோரால் நேரடியாக அனுப்பப்பட்ட தொகை ரூ.4156·3 என்பது ஒப்புநோக்கத்தக்கது. இவர்களுக்குரிய செலவினம் என்பது கடந்த மூன்று தசாப்தங்களாக அரசாங்கம் சமூகநீதி பேணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட சமூகநல பணிகளுக்கான கொடுப்பனவுகளே. இதற்கென உடனடியான நிதிச் செலவுகள் இல்லை. ஆனால் இவ் வலயம் போலவே செலாவணி உழைப்பதாயும் தொழிலின்மையைக் குறைப்பதாயும் உள்ளது. எல்லா நாடுகளிலுமிருந்து அனுப்பப்பட்ட பணம் இக் காலத்தில் இவ்வலய ஏற்றுமதி வருமானத்தைப் போல் 2 மடங்கானதாக அதாவது 7653·1 மில்லியனாக காணப்பட்டதையும் கவனத்திற் கொள்வது அவசியமே.

புடவை, ஆடை ஏற்றுமதியானது கடந்த ஒரு தசாப்த காலத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடைந்துள்ளது. இது இலங்கையின் ஏற்றுமதியில் மூன்றும் இடத்தைப் பெறுகின்றது. இது புதிய ஏற்றுமதி மாதிரியே. தயாரிக்கப்பட்ட உடைகள், கைத்தறி போன்ற எல்லாவற்றின் ஏற்றுமதிப் பெறுமதிகளை ஒப்புநோக்குதல் அவசியம்.

| வருடம் | மில்லியன் ரூபா | SDR மில்லியன் |
|---|---|---|
| 1971 | 5 | 1 |
| 1972 | 7 | 1 |
| 1973 | 32 | 2 |
| 1974 | 33 | 3 |
| 1975 | 26 | 3 |
| 1976 | 70 | 7 |
| 1977 | 143 | 13 |
| 1978 | 481 | 25 |
| 1979 | 1108 | 55 |
| 1980 | 1814 | 84 |
| 1981 | 3000 | 132 |
| 1982 | 3280 | 144 |

சர்வதேச வர்த்தக சூழல் சார்ந்ததாகவே இத்துறை ஏற்றுமதி வளர்ச்சி அமையும். மேற்கு நாடுகளில் தொழிலாளர் கூலி உயர்வதால் செலவு உயரும்போது இலங்கையில் பெருமளவு ஊழியர் குறைந்த கூலியில் கிடைப்பதால் இத்துறை வளர முடிந்தது. 1977 க்குப் பிந்திய சலுகைகளும் தூண்டல்களும் கூட இவ் வலயத்தூடாக இவ்வதிகரிப்புக்கு உதவின. உடை வகை இறக்குமதி செய்யும் நாடுகள் 1976இல் முதன்முதலாக நோர்வேயுடன் பல்தார் ஒப்பந்தத்தில் (Multi-Fibre Agreement) கைச்சாத்திட்ட நடவடிக்கை இலங்கையின் ஏற்றுமதியைப் பாதிப்பதாயிற்று. இதே வகை ஒப்பந்தங்களை சுவிடன், ஐரோப்பிய பொருளாதார சமூகம், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்றனவும் மேற்கொண்டன. இத்தகைய நடவடிக்கைகள் முதலில் சேட், பெண்களின் மேற்சட்டை போன்றவற்றை பாதித்தன. பின்பு இலங்கையின் பிரபல்யமான ஏனைய புடவை வகைகளையும் பாதிப்பதாயிருந்தது. இதில் தற்போது 120 நிறுவனங்கள் நேரடியாக ஈடுபடுகின்றன. சில உதவியாளராகவும் பிரதான ஏற்றுமதியாளரின் கீழ் இயங்குகின்றன. இவ் ஏற்றுமதித்துறையில் ரூ. 1033 மில்லியன் வரை முதலீடு உண்டு. முதலீட்டு வலயத்தில் உள்ள முதலீடு இதில் ரூ. 520 மில்லியன் மட்டுமே. இத்துறையின் மொத்த தொழில் வாய்ப்பு நேரடியாக 61,500 பேருக்கு கிடைக்கிறது. ஆனால் வலயத்தில் இத் துறையில் 26,541 பேருக்கே தொழில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கையின் இவ்வகை ஏற்றுமதிக்கான சந்தையை தொகை ரீதியாகவும் பெறுமதி ரீதியாகவும் பின்வருமாறு காட்டமுடியும்.

| | 1978 | | 1982 | |
|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| தொகை (மில்லியன் துண்டுகள்) | | | | |
| ஐக்கிய அமெரிக்கா | 5 · 8 | 43 · 7 | 16 · 7 | 47 · 4 |
| ஐரோப்பிய பொருளாதார சமூகம் | 3 · 4 | 25 · 8 | 12 · 5 | 35 · 5 |
| ஸ்கண்டி நேவியா | 1 · 1 | 8 · 4 | 2 · 7 | 7 · 7 |
| மத்திய கிழக்கு | 1 · 7 | 13 · 2 | 1 · 7 | 4 · 9 |
| பெறுமதி (மில்லியன் ரூபாவில்) | | | | |
| ஐக்கிய அமெரிக்கா | 185 · 4 | 38 · 6 | 1067 · 6 | 53 · 7 |
| ஐரோப்பிய பொருளாதார சமூகம் | 128 · 7 | 26 · 8 | 660 · 3 | 33 · 2 |
| ஸ்கண்டி நேவியா | 36 · 7 | 7 · 5 | 89 · 7 | 4 · 5 |
| மத்திய கிழக்கு | 84 · 4 | 17 · 6 | 74 · 6 | 3 · 8 |

இதன்படி ஐக்கிய அமெரிக்கா பிரதான சந்தையாக காணப்படுகிறது. இலங்கை தனது முதலீட்டு வலயத்தை பாதுகாப்பதாயின் இச் சந்தையின் அளவினை விரிவுபடுத்தவும், புதிய நாடுகளைக் கவர விளம்பரங்களை அதிகரிப்பதும் அவசியம். எமது மரபுவழி ஏற்றுமதிப் பண்டங்கள் எப்படி மேற்குலகில் தங்கியிருந்ததோ, அதே மாதிரியான, அதே நாடுகளில் தங்கியிருக்கும் வலயமாக இது காணப்படுகிறது. ஆனல் பெருந்தோட்ட துறையில் இந்திய ஊழியப்படையே பயன்படுத்தப்பட்டது. சராசரி இலங்கையருக்கான வாழ்க்கை வசதிகள் கொடுபடாத நிலையில், ஒதுங்கிய துறையாக அது வளர்ந்தபோது கூலிபற்றிய பிரச்சினை குறுங்காலத்தில் அதிகரிக்கவில்லை. ஆனல் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தொழில் பெறுவோர் இலங்கையராயும், செலவு நாட்டம் கூடிய இளம் வயதினராயும் அரசியல் கோரிக்கைகள் எழுப்பும் உயிர்நிலை கொண்ட கல்வித்தரமும் அரசியல் அந்தஸ்தும் உடையோராயும் நகர்ப்புற தொடர்புடையோராயும் உள்ளனர். இதனல் இவர்கள் கூலிகளை தொடர்ந்து மட்டுப்படுத்தி செலவைக் குறைத்து, "மலிவான ஏற்றுமதி"களாக இவற்றைக் காட்டுவதால் மாத்திரம் இவ் வலயத்தை தொடர்ந்து பேண முடியுமா என்ற பிரச்சினையை அடிமனதில் கொள்ளவேண்டும். "குழு 10" ஐச் சேர்ந்த நாடுகள் தமது வர்த்தக நலன்களை விட்டுக்கொடுக்க முன்வரமாட்டா. பிரித்தானிய – இந்தோனிஷியா கடந்த கால கசப்பான புடவை வர்த்தக நெருக்கடிகளை நினைவுகொள்வது இலங்கைக்கு எச்சரிக்கையாக அமையும். இதனல் அவுஸ்திரேலியா, ஜப்பான், லத்தின் அமெரிக்கா, சோவியத்யூனியன் போன்றவற்றை சந்தை யாக்குவதில் அதிக நாட்டம் தேவை. அல்லது இவ் வலயத்தை நீண்ட காலத்தில் பாதுகாப்பது நிச்சயமற்றதே. இலங்கையின் சுற்றுலாத்துறையின் எதிர்காலம் எவ்வாறு முதலாம் உலகில் ஏற்படும் பணவீக்கம், 'தொழிலின்மை நிலைமைகளால் பாதிக்கத்தக்கதோ அதே மாதிரி புடவை ஏற்றுமதியும் ஐக்கிய அமெரிக்க, ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஆகியவற்றில் ஏற்படும் பொருளாதார மந்தம், தொழிலின்மை என்பவற்றல் நிச்சயம் பாதிக்கப்படும். அங்கு மூன்றும் உலகின் புடவைக் கொள்வனவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தங்களையும், தொழிற்சங்க கோரிக்கைகளையும் நாம் எமது தடைகளாக கொள்ளவேண்டும்.

இறக்குமதி உள்ளீடுகளில் தங்கியிருக்கும் ஏற்றுமதிகளாக இவை வளர்க்கப் படுவதையும் தவிர்க்க வேண்டும். இறக்குமதிகளின் விலைகள் குறைக்கப்பட முடியாதனவாக இருக்குமென்பதால் ஏற்றுமதிகளின் உற்பத்திச் செலவைக் குறைந்த மட்டத்தில் பேணுவது பிரச்சினையேயாகும். இதனல் உள்ளீடுகளாகும் துணிவகை போன்றவற்றின் உற்பத்தியையும், தரத்தையும் தூண்டாவிடில இத்தொழிலும், வலயமும் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

இத்துறையின் நிதிச்செலவைச் குறைப்பதற்கு குறைந்த வீத வட்டியில் சலுகைநிதி அதிகம் கிடைக்க வேண்டும். ஆனல் உள்நாட்டில் பாதுகாப்புச் செலவு துரித மகாவலி, வீடமைப்பு சார்ந்து வீக்கமடைந்த அரச செலவுகள் பாதீட்டின் பற்றுக் குறையை அதிகரித்து வருகின்றன. பணச்சந்தையில் அரசின் கடன்கள் பெருகி வருகின்றன. பொதுப்படுகடன் வட்டி கூடிவருகின்றது. படுகடன் சேவை விகிதம் 1975ல் 22.9% ஆயும் 1985ல் 22.4 வீதமாயும் உள்ளது. இந்நிலையில் மத்தியவங்கி அரசுக்கு நிதியிட வேண்டியுமுள்ளது இதனல் மீள்நிதியைத் தொடரமுடியுமா? வட்டி வீதங்களைக் குறைக்க முடியுமா? என்பன போன்ற கேள்விகளும் எழுகின்றன. இதனல் வலயத்தின் பல்வேறு நிறுவனங்களுக்குமான ஏற்றுமதி மீள்நிதி—கடன் வசதிகள் குறைக்கப்பட வேண்டி வருவதனல் இவ்வலய வளர்ச்சி நிச்சய மற்றதேயாகும்.

1979 மே மாதத்திலிருந்து அந்நியச் செலாவணி வங்கியலகு முறை (FCBU) தொழிற்படலாயிற்று. இது இவ்வலயத்தவர்க்கு வசதிகளை யளிப்பதால் இதன் விஸ்தரிப்புக்கு உதவும் எனப்பட்டது. ஆனல் இவ்வகைத் தொழிலில் வெளிநாட்டு வங்கிகளும் இயங்கும் சூழலில் பணநிரம்பல் கூடுதலும், பணவீக்கம் ஏற்படுதலும் தவிர்க்க முடியாததாகும். இது பொருளாதார ரீதியில் பல் முனைப்பட்ட பிரச்சினைகளை உருவாக்கும். சரியான பணச் சந்தை வளர்ச்சி விருத்தி பெருத நிலையில் இதன் வெளிக்கரை வங்கித்தொழிற் பாடுகளும் பணவீக்க நெருக்கடிகளையே அதிகரிக்கும்.

இந்த முதலீட்டு ஊக்குவிப்பு வலய ஏற்றுமதி வருவாய்கள் கூடிச் சென்ருலும் கூட இலங்கையின் எதிர்பார்க்கையை திருப்தி செய்வதாக அமையவில்லை. சென்மதி நிலுவை சாதகமாக்கப் படவில்லை. தாராள இறக்குமதியின் செலவுப்பெருக்கம் இத்துடன் ஒத்துச் செல்லவில்லை. 1975ல் — 1421 மில்லியனுக இருந்த வியாபாரமீதி 1985ல்—19,328 ஆக பெருகியிருந்தது. நடைமுறைக் கணக்குமீதி கூட இதே காலத்தில் —772 மில்லியனிலிருந்து —11,532 மில்லியனுகக் கூடியிருந்தது. செலாவணி வள இடைவெளிகூட முறையே —3061 மில்லியனிலிருந்து —28,863 மில்லியனுகப் பெருகிற்று.

இதனல் முதலீட்டு வலயம் எமது "பூரண நம்பிக்கைக்குரிய செலாவணிப் பாதுகாவலன்" எனக் கொள்ள நியாயமில்லை. பெருந்தோட்டத் துறை போலவும் சுற்றுலாத் துறை போலவும் மீண்டும்

மேற்குலகப் பரிவில் உயிர் வாழும் துறையாகவே தென்படுகிறது. செலவற்ற மத்திய கிழக்கு உழைப்புடன் ஒப்பிடும்போது இத்துறை அவ நம்பிக்கைப் பார்வைக்கு உள்ளாகிறது. "உலக வளங்களின் பரிவர்த்தனை" என்ற நோக்கில் தாராள வர்த்தகமும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயமும் இலங்கைக்கு சார்பான பாதையில் வளர்வதாயில்லை. இவனுல் முதலீட்டு வலயமும் அவதானத்துடன் கட்டுப்படுத்திய முறையில் வளர்க்கப்பட வேண்டியது என்ற படிப்பினையை பெறவேண்டும். இதனை "பியகம" "வெலிசர" வலய விஸ்தரிப்பில் கருத்திற் கொள்வது பயனுடையதாயிருக்கும்.

## ஏற்றுமதி உற்பத்திக் கிராமத்தின் முன்மாதிரி

ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துவன் மூலம் பாரம்பரியமான ஒரு சில பொருள்களில் தங்கியிருக்கும் நிலையை அகற்றுவதற்காக பல்வேறு முயற்சிகள் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஏற்றுமதி உற்பத்தியை கிராமமட்டத்துக்கு எடுத்துச்செல்வதன் வாயிலாக வேலைவாய்ப்பு, வருமான அதிகரிப்பு, அந்நிய செலாவணி உழைப்பு ஆகிய மூன்று முனைகளில் வளர்ச்சிகாண எத்தனிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளின் முன்னர் தொடங்கப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் பெரும் வெற்றியை அளித்துள்ளது. இவ்வாண்டு ஏற்றுமதிக்காக ஜனதிபதி விருதுபெற்ற நிறுவனங்களுள் பெருமளவு ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள் காணப்படுதல் இதற்குச் சான்ருக அமைகின்றது.

இந்த வகையில் தம்பதெனியா ஏற்றுமதி உற்பத்திக் கிராமம் முதலிடம் வகிக்கின்றது. ரூ. 29,000/- மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கிராமம் கடந்த ஆண்டில் ரூ. 35 லட்சம் இலாபமாகப் பெற்றுள்ளது. இத்தகைய கிராமங்கள் மக்கள் கம்பனி அமைப்புக்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. தத்தமது பிரதேசங்களில் அதிகரித்த வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தருவதிலும் இக்கிராமங்கள் முன்னணியில் நிற்கின்றன. இதனுல் வருமான அதிகரிப்பும் பெருமளவில் ஏற்படக்கூடியதாகவுளது.

## வகையற்றோர் தொகை அதிகரிக்கின்றது

கடனிறுக்கும் ஆற்றலற்றோர் தொகை முழு உலகிலும் அதிகரித்துச் செல்கின்றது. 1984 முடிவில் அவுஸ்திரேலியா 1·7 மில்லியன் டொலர்களை வெளிநாட்டு கொள்வனவாளர் வகையற்றுப் போனமையால் இழந்தது.

இங்கிலாந்தில் 1983 இல் 12,500 கம்பனிகளும் 1984 இல் 13,650 கம்பனிகளும் 1985 இல் 14,360 கம்பனிகளும் 1986 நடுப்பகுதி வரை 7,160 கம்பனிகளும் குலைக்கப்பட்டன. 1986 இன் முன்னரைப்பகுதியில் சுவீடனில் 3970 பேர் வங்குரோத்து நிலையை அடைந்தனர்.

இந்நிலை ஏற்றுமதி கடன் காப்புறுதியை பெருமளவில் பாதிக்க வல்லது. தென்னுபிரிக்க ஏற்றுமதி கடன் காப்புறுதியாளர் அண்மைக் காலத்தில் பின்வரும் தொகை இழப்பீடுகளை வழங்கியுள்ளனர்.

1983 – ரூ. 16·6 மி.
1984 – ரூ. 33·8 மி.
1985 – ரூ. 14·7 மி.

சிம்பாவேயில் 1984 இல் ரூ. 1,135 மில்லியனும் 1985 இல் ரூ. 5,221 மில்லியனும் இத்தகைய இழப்பீடுகளாகச் செலுத்தப்பட்டுள்ளன. கொங்கொங்கில் 1983 இல் ரூ. 19·9 மி., 1984 ரூ. 10·7 மி., 1985 ரூ. 5·2 மில்லியன்களும் இவ்வாருக இழக்கப்பட்டன.

வணிக மஞ்சரி வளர்ந்து உயர்ந்திட

வாழ்த்துகின்றோம்

# அபிராமி அன் கோ

பலசரக்கு மளிகை

66, மானிப்பாய் வீதி, - யாழ்ப்பாணம்.

வணிக அறிவியலைப் பரப்புதற்காய் பவனிவரும்

வணிக மஞ்சரிக்கு எம் வாழ்த்துக்கள்

வெளிவாரி பட்டப்படிப்புகள் புகட்டுவதில்

முன்னணியில் திகழ்பவர்கள்

# அஸ்ரன் இன்ஸ்ரிடியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி, - யாழ்ப்பாணம்.

கிளை: 101/1, ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்.

"வணிக மஞ்சரி" வளர்ந்து பொலிகவென்

வாழ்த்துகின்றேம்

# வட இலங்கை தொழில் நுட்ப நிறுவனம்

லண்டன் கணக்கியல் துறையில்

## I. C. M. A., A. A. T., I. D. P. M., I. A. B.,

மற்றும்

பல்வேறு பயிற்சி நெறிகள்

இவற்றுடன்

ஆங்கில, தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகளும்

ஆங்கில வகுப்புகளும்

நடைபெறுகின்றன.

# NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, சென் பீற்றர்ஸ் ஒழுங்கை,

ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24355

வட இலங்கை மக்களுக்கு
அறிமுகப்படுத்துகின்றோம்

அம்பவெல

## ஹைலண்ட் பால் மா

- சுவையானது
- தரத்தில் சிறந்தது
- ஊட்டச்சத்து மிக்கது
- விலை மலிவானது

மூன்று லீற்றர் முழு ஆடைப் பால்
தயாரிக்கக்கூடிய 400 கிராம் பால்மாவின்
விலை ரூபா 22/- மட்டுமே

வட மாகாண ஏக விநியோகத்தர்கள்:

# சிற்றி ஏஜென்சி

# CITY AGENCY

158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24817

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.